பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

**New Master INSTITUTE**
B. M. C Lane-JAFFNA
**89 & 90 A/L**
**Weekend Classes**
24-09-88 சனிக்கிழமை வழமையான நேர அட்டவணைப்படி வகுப்புக்கள் யாவும் நடைபெறும்.
✶ நிர்வாகி

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

விலை ரூ 2/-

**New Master INSTITUTE**
B. M. C Lane Jaffna
90 A/L
ZOOLOGY
குழியவியல்
Sat, & Sun 7.30, 12.30
BOTANY
அலகு – 4
Sat, & Sun - 8.30, 11.30

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆு புரட்டாதி மீ 07 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஸபர் பிறை 11 (23 - 09 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 191

# தண்டிக்கப்பட்ட கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம்

## தம்மை விடுதலை செய்யக் கோரி இம்மாதம் 30ஆம்திகதி ஆரம்பிப்பர்

— அலுவலகச் செய்தியாளர்: எஸ். ராஜ்குமார் —

யாழ்ப்பாணம், செப்டம்பர் 23

பூஸாவில் உள்ள தமிழ் பேசும் தண்டிக்கப்பட்ட அரசியல் கைதிகள் தமது விடுதலை கோரி எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் சாகும்வரையான உண்ணாவிரதத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

30 ஆம் திகதிக்கு முன்னர் தமது விடுதலைக்குச் சிபார்சு செய்யவேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் தங்களில் 5 பேர் சாகும்வரை உண்ணாவிரதத்தில் குதிக்க உள்ளனர் என்றும் மகஜர் ஒன்றின் மூலம் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தமகஜர் ஜனாதிபதி திரு.ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும், இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்திக்கும், இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஷிற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப மகஜரின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

பயங்கரவாதிகளுக்கு உணவு, புகலிடம் என்பன வழங்கியமை, படையினருக்குப் பயங்கரவாதிகள் பற்றிய தகவல்களைக் கொடுக்கத் தவறியமை, பயங்கரவாதிகளுக்குச் சுரொட்டி ஒட்டுவதற்கு உதவி செய்தமை என்று கூறப்படும் சிறுசிறு குற்றங்களின் நிமித்தமே நாம் கைதுசெய்யப்பட்டு வழக்குத் தொடுக்கப்பட்டுத் தற்பொழுது தண்டிக்கப்பட்டு அரசியல் கைதிகள் என்ற பெயரில் சிறையிலே காலத்தைக் கழிக்கிறோம்.

எம்மில் பெரும்பாலானோர் இவைகளில் சம்பந்தமில்லாதவர்களான அப்பாவிகள். அவ்வா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீனி இராஜினாமா

கொழும்பு, செப்.23

திரு. ஸ்ரீனி டி மெல் புளத்சிங்கள எம். பி. பதவியையும் இராஜினாமாச் செய்துவிட்டார்.

இதனை நேற்று நாடாளுமன்றத்தில் பதில் செயலாளர் நாயம் தெரிவித்தார்.

திரு. ஸ்ரீனி டி மெல் ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து இராஜினாமாச் செய்தது தெரிந்ததே. (ஒ-எ)

## அவதூறு மசோதாவை விலக்கிக் கொண்டார் இந்தியப் பிரதமர் ராஜீவ்!

புதுடில்லி, செப். 23

இந்திய அரசு கொண்டு வந்த பத்திரிகை அவதூறு மசோதா சட்டமாகாமலே விலக்கிக் கொள்ளப்படுவதாக பிரதமர் ராஜீவ்காந்தி நேற்று அறிவித்தார்.

மசோதா விலக்கிக் கொள்ளப்பட்டாலும் கொண்டு வருவதற்கான காரணங்கள் அப்படியே தான் உள்ளன என்று பிரதமர் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

மசோதாவில்கூறப்பட்டுள்ள விஷயங்கள் குறித்து சம்பந்தப்பட்ட

(8 ஆம் பக்கம் பார்க்க)



தியாகச் செம்மல் திலீபன் தியாக நிலை அடைந்த நல்லூரில் நேற்றுப் பல பாடசாலைகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மாணவ மாணவிகள் உண்ணாவிரதம் இருந்தபோது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காண்கிறீர்கள். (படங்கள்: ஜெயம்)

## ஜனாதிபதித் தேர்தல்:

## ஐ. சோ. மு. வேட்பாளர் ஒஸி அபயசேகரா?

கொழும்பு, செப்.23

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய சோசலிச முன்னணியின் சார்பில் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியைச் சேர்ந்த திரு. ஒஸி அபயசேகரா போட்டியிடலாம் என்று முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவரின் தெரிவு கூடிய விரைவில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

படுகொலை செய்யப்பட்ட திரு. விஜேகுமாரணதுங்காவின் மனைவி திருமதி சந்திரிகா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

23 – 09 – 1988
புரட்டாதி – 07
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
06.02முதல் 07.32வரை
ராகுகாலம்:
10.32முதல் 12.02வரை
பிரதோஷ விரதம்

## சுன்னாகத்தில் கடையடைப்பும் உண்ணாவிரதமும்

யாழ்ப்பாணம், செப் 23

சுன்னாகத்தில் இன்று கடையடைப்பும், உண்ணாவிரதமும் நடைபெறவுள்ளன.

தியாகி திலீபன் உயிர் நீத்த ஓராண்டு நினைவை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை சுன்னாகம் வர்த்தகர்கள் உண்ணாவிரதம் அனுஷ்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கில் ஐ.தே.கவும் போட்டியிடுமாம்

கொழும்பு, செப். 23

வடக்கு—கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்கள் போட்டியிடுவர்.

—இப்படி ஐ. தே. க. தலைவர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்தார்.

எட்டு மாவட்டங்களிலும் ஐ.தே.க. வேட்பாளர்கள் நியமிக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-எ)

## வடக்கிலோ, தெற்கிலோ யுத்த நிறுத்தம் வரவேற்கத்தக்கது

### சபையில் கலவான எம்.பி. டியூ

கொழும்பு, செப் 23

வடக்கு என்றாலும் சரி, தெற்கென்றாலும் சரி யுத்த நிறுத்தம் வரவேற்கப்படவேண்டியதே.

கலவானத் தொகுதி எம். பி. திரு. டியூ குணசேகரா நேற்று அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தின் போது இவ்வாறு கூறினார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை கூடியது. அவசரகால சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் நடைபெற்றது.

அனுராதபுரம் கிழக்கு எம். பி. டி. எம். ஆரியதாஸ:

நீதி, நியாயம் பற்றிப் பேசும் சுதந்திரக்கட்சியினர் தங்களின் பதவிக் காலத்தில் நடந்து கொண்டதை மறந்து விட்டார்களா?

மத்துகம எம். பி. அனில் முனசிங்க;

இன்றைய நிலைக்கு அரசாங்கமே பொறுப்பு ஏற்க வேண்டும்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



இந்தியாவில் மக்கள் கருத்துக்கு மதிப்பளிச்ச ராஜீவார், ஈழத்தமிழர் விஷயத்திலும் மக்கள் கருத்துக்கு மதிப்பளிக்க முன்வருவாரா?

தியாகி திலீபன் நினைவாக

## நல்லூரில் உண்ணாவிரதம்: நாளாந்தம் பெருகும் மக்கள் கூட்டம்!

யாழ்ப்பாணம், செப். 23

தியாகி திலீபன் தியாக நிலை அடைந்த ஓராண்டு நினைவாக நல்லூரில் நடத்தப்பட்டுவரும் உண்ணாவிரதத்துக்கு பொதுமக்கள், மாணவர்கள் ஆதரவு பெருகி வருகின்றது. நாளாந்தம் எண்ணிக்கையும் பெருகி வருகின்றது.

நேற்று எட்டாவது நாளாக நடந்த உண்ணாவிரதத்தில் பல பாடசாலைகள், ரியூட்டரிகளைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகள் பங்குபற்றினர்.

உண்ணாவிரதம் நடைபெறும் இடத்தில் திலீபனின் உருவப்படம் வைத்து விளக்கேற்றப்பட்டிருந்தது.

சோக இசையும், புரட்சிக் கீதங்களும் அங்கு ஒலித்த வண்ணம் இருந்தன.

திலீபன் கடைசியாக ஆற்றிய சொற்பொழிவுகளும் அங்கு ஒலிபரப்பப்பட்டு வருகின்றன

நேற்றைய உண்ணாவிரதத்தில் ஸ்ரான்லிக் கல்லூரி, வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ். கன்னியர்மடம் தமிழ் மகா வித்தியாலயம், அருணோதயாக் கல்லூரி, வட்டு-இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும், மாணவிகளும் கலந்து கொண்டனர்.

உண்ணாவிரத நிகழ்ச்சிக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். மாணவர் ஒருங்கிணைப்புக் குழு மேற்கொண்டுள்ளது. (ஒ-க-10)

### ஊரெழு உண்ணாவிரதத்தில் மாணவர்களும்

யாழ்ப்பாணம், செப் 23

தியாகி திலீபனுக்கு அஞ்சலி தெரிவித்து ஊரெழுவில் நடைபெற்று வரும் உண்ணாவிரதத்தில் நேற்று ஊரெழு வாழ் மக்களுடன் அயற்கிராமங்களில் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்டனர்.

ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலய முன்றலில் இந்த உண்ணாவிரதம் நடைபெற்றுவருகிறது.

தியாகி திலீபனின் தந்தையாரான திரு. நா. இராசையா குளிர்பானம் வழங்கி நேற்றைய உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். (ஒ-க)

## திங்களன்று நல்லூரில் மாபெரும் அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப் 23

தியாகி திலீபன் உயிர் நீத்து ஓராண்டு நினைவு தினமாகிய 26 ஆம் திகதி திங்கட்கிழமை நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் மாபெரும் அஞ்சலிக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை பிரசைகள் குழுக்களின் இணைப்புக்குழு மேற்கொண்டுள்ளது.

நல்லூரில் அன்றைய தினம் நடைபெறும் உண்ணாவிரதத்திலும், அஞ்சலிக் கூட்டத்திலும் பங்குபற்றும்படி சகல பிரசைகள் குழுவினருக்கும் வேண்டுகோள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார் இளைஞர்

### புங்குடுதீவில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப் 23

புங்குடுதீவுப் பகுதியில் இளைஞர் ஒருவர் நேற்றுத் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

புங்குடுதீவு பெருங்காடுப் பகுதியில் சம்பந்தப்பட்ட இளைஞர் ஒழுங்கை ஒன்றின் வழியாகச் சென்று கொண்டிருந்தபோது, அவ்வழியால் வந்த அமைதிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாகச்சொல்லப்படுகிறது.

பெருங்காடு சிவன் கோவிலடியில் நேற்றுக் காலை 8-30 மணியளவில் நடந்த இச்சம்பவத்தைத் தொடர்ந்து காயமுற்ற இளைஞர் படையினரால் முகாமுக்குக் கூட்டிச் செல்லப்பட்டார்.

இரண்டு டிரக்குகளில் வந்த அமைதிப்படை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ஹர்த்தால்

திருகோணமலை, செப் 23

திலீபனின் மறைவை ஒட்டி திருகோணமலையில் கடந்த திங்களன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அரச காரியாலயங்கள், கூட்டுத்தாபனக் காரியாலயங்கள், வங்கிகள், தபால் நிலையம் ஆகியன முற்றாக இயங்கவில்லை. கடைகள் மட்டும் திறந்திருந்து வழமை போல் வியாபாரம் நடைபெற்றது

அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை வழமை போன்று சகல காரியாலயங்களும் இயங்கத் தொடங்கின.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆலோசனைக்கு இணங்கவே செவ்வாய் முதல் நிலைமை வழமைக்குத் திரும்பியதாக தெரியவருகிறது

எதிர்வரும் 26 ஆம் திகதி பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது (ஒ-150)

## தமிழ் இளைஞர் நீர்கொழும்பில் சுட்டுக் கொலை!

பலாலி, செப் 23

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் நீர்கொழும்புப் பகுதியில் வைத்து இனம் தெரியாத இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்,

'உதயன்' என அழைக்கப்படும் பிரஸ்தாப இளைஞர் 'புளொட்' இயக்கத்தைச் சேர்ந்தவர் எனச் சொல்லப்பட்டது

மாற்று இயக்கம் ஒன்றைச் சேர்ந்தவர்களே இக்கொலையைச் செய்திருக்கலாம் என நம்பப்படுகிறது. (ஒ-119)

## நியூஸிலாந்துக்கு தங்கப்பதக்கம்

சோல், செப். 23

ஒலிம்பிக் போட்டியில் நியூஸிலாந்து முதலாவது தங்கப் பதக்கத்தை நேற்றுப் பெற்றது.

குதிரைச் சவாரியில் முதலிடத்தைப் பெற்றதால் நியூஸிலாந்துக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது. (ஒ-எ)

## பெண்களுக்கு அனுமதி

காங்கேசன்துறைபுனர் வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களைப் பார்வையிடத் தற்பொழுது தாய்மார்களும் அனுமதிக்கப்படுகின்றனர்.

கடந்த பல வாரங்களாக பெண்களைச் சோதனையிடுவதற்கு காங்கேசன்துறை புனர்வாழ்வு முகாமில் பெண் பொலிஸார் இல்லாததன் காரணமாகத் தாய்மார் முகாமுக்குள் செல்வது தடை செய்யப்பட்டது.

எனினும் கடந்தபுதன் கிழமை முதல் பெண் பொலிஸார் அங்கு கடமைக்கு அமர்த்தப்பட்டதை அடுத்து இப்போது பெண்களும் முகாமுக்குள் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். (ஒ-10)

## முகாமுக்கு முன்னால் திலீபனின் படம்

இயக்கச்சியில் அமைதிப்படையினரின் முகாமுக்கு முன்னால் திலீபனின் உருவப்படம் வைத்து பந்தல் அமைக்கப்பட்டுள்ளது.

முகாமுக்கு முன்னால் தோரணங்கள், சவுக்குகள், கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டுள்ளன. (ஒ-144)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையி லுள்ள Honda Chaly - 50CC Motorcycles (பலநிறங்களில்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- சதாஸ் மோட்டோர்ஸ் அன் ஹாட்வயார்ஸ், 56/2, ஸ்ரான்லி வீதி, (இலங்கை வங்கி அருகாமை) யாழ்ப்பாணம். (6764)

10 பட்டறி சாஜ் செய்யக்கூடிய சாஜ்ஜர் [Charger] விற்பனைக்கு உண்டு. தொடர்பு ஞ. பிரசாத், ரேடியோ ரெலிவிஷன் திருத்துனர், சந்தன மாதா கோயில் முன்பாக பாண்டியன் தாழ்வு, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (6766)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் Showcase, கட்டில், அலுமாரி, T.V, கண்ணாடிமேசை, சாப்பாட்டுமேசை, கதிரை, கசற்றேடியோ, H-11 செற் மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு M இரா கராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (சென்பற்றிக்ஸ் சந்தியருகில்) (6730)

Black & White T.V. சைக்கிள், தேக்கு அலுமாரி, றேசறி வாங்கு மேசை, ஹோல் செற் உடன் விற்பனைக்குண்டு. 120, இராசாவின் தோட்டம் றோட், யாழ்ப்பாணம் (6712)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C124)

### அரைச்சலார்

31-10-88 வரை விசேட சலுகை, உங்கள் குளிர் சாதனப் பெட்டிகளை ரூபா 600/- மாத்திரம் செலுத்தி ஒரு வருட உத்தரவாதத்துடன் Gas. நிரப்பிக் கொள்ளுங்கள், Omega, Manipay Road, Jaffna. (6549)

### விநியோகம்

24-9-1988 முதல் பிறிமா Lohmann இன சிவப்பு, வெள்ளை ஒரு நாள் பேட்டுக்குஞ்சுகள் மற்றும் ஒருநாள் புரோயிலர் குஞ்சுகள் பெற்றுக் கொள்ளலாம். முன்பதிவு ஏற்றுக் கொள்ளப்படும். M. G. M. Forage Stores, 208, 1st Cross St, Jaffna. (6758)

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஒரு வாரத்திற்கு முன்னர் முழுப்பணமும் செலுத்தி 100 குஞ்சுகளுக்குமேல் கொள்வனவு செய்பவர்களுக்கு கீழ் வரும்விலைகளில் கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். பிறவுண்சேவல் குஞ்சு 3.00 கறுப்பு சேவல் குஞ்சு 6.75. சற்குண ராஜா & பிறதர் பிரம்படி லேன், கொக்குவில். (6761)

## தேவை

யாழ் நகரில் உள்ள பெண்ஸி கூட்ஸ் ஸ்தாபனத்திற்கு 17 வயதிற்குட்பட்ட ஆண்கள் தேவை விண்ணப்பிக்கவும். தொடர்பு;- 372, C/o உதயன், யாழ்ப்பாணம் (6763)

### தேவை

அனுபவமுள்ள அச்சுக் கோப்பாளர் உடன் நேரில் வரவும். ஏசியன் அச்சகம் 28, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (6760)

அப்பளம் தயாரிப்பதில் அனுபவம் உள்ள பெண் பிள்ளைகளும் வேலை பழகுவோர்களும் தேவை. நேரில் வரவும் V சண்முகராஜா, அப்பளக் கம்பனி இல. 18 கொண்டலடி லேன் குறிப்பு: சங்கிலியன் வீதி ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். (6762)

### வீட்டுப்பணிப்பெண் சிங்கப்பூர்

சிங்கப்பூர் சீன வீட்டிற்கு பணிப்பெண்ணாக பணிபுரிய 28-35 வயதிற்குட்பட்ட ஜேமன் கத்தோலிக்க ஆங்கிலம் சரளமாகப் பேசக்கூடியதும் சாதி அனுபவமும் கொண்ட பெண் உடனடியாகத் தேவை. வெள்ளிக்கிழமை (இன்று) வருபவருக்கு முன்னுரிமை. சம்பளம் மாதம் சிங்கப்பூர் டொலர் 230/- த. துரைசிங்கம், 376B, நாவலர் வீதி, அரியாலை. யாழ்ப்பாணம். (ஸ்ரான்லி கல்லூரிக்கு முன்) (6540)

### மணப் பெண் தேவை

யாழ் இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த 26 வயது நிரம்பிய கனடாவில் பாங்கில் வேலை செய்யும் மணமகனுக்கு பெண் தேவை. தொடர்பு: ABCDE விவாகப் பொருத்துனர் 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. (6767)

உயர் வேளாளகுலம், சைவபோசனம் லண்டனிலுள்ள 31 வயது கணக்காளருக்கு லண்டனிலுள்ள அல்லது அங்கு போகக்கூடிய அழகான மணப்பெண் தேவை. இலங்கை அரசாங்கத்தில் கௌரவமான உத்தியோகத்திலுள்ள 32 வயதுப் பெண்ணுக்கு சமமான அந்தஸ்திலுள்ள மணமகன் தேவை. இருவருக்கும் அற்ப செவ்வாய்க்குற்றம் உண்டு. சீதனம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். 194C/o உதயன், யாழ்ப்பாணம். (6691)

## கல்வி

### AL இரசாயனம்

Brown Road. A/L 89 இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ். ஒரு வருட வகுப்புக்கள் பிரிவு I திங், செவ், புதன், வியா, வெள்ளி சேதன இரசாயனம். ஆரம்பம்: (20-9-88) செவ். 4.30P m. (செவ், வியா, 4.30 p.m) பௌதிக இரசாயனம், ஆரம்பம்:(23-9-88) வெள்ளி 4.30 p.m பிரிவு II ஆரம்பம்:24-9-88சனி4.30p.m (சனி, ஞாயிறு 4.30-6.30 pm) முழுப்பாடத்திட்டமும் விரு விடைகளும் செய்யப்படும். (6531)

### பிரயோக கணிதம்

A/L பிரயோக கணித நான்கு வினாக்களிற்குப் பயிற்சியளிக்கும் படிமுறைப் பயிற்சி நூல் ''காவியும் அதன் பிரயோகங்களும்'' வெளிவந்துவிட்டது. 125 வினாக்களையுடையது. யாழ், கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை, நகரொங்கும் கிடைக்கும். ஆசிரியர்: சி. துரையப்பா, St. John's, College, Jaffna. (6538)

### 6ஆம் ஆண்டு அனுமதிப் பரீட்சை

யாழ். இந்துக் கல்லூரி யாழ் வேம்படி மகளிர் கல்லூரி உட்பட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான ஆண்டு 6 அனுமதிப் பரீட்சைக்குரிய கணிதம், தமிழ். பாடக்கைநூல் வெளிவந்துவிட்டது. ஆக்கியோன் ஆ. ந. இராசேந்திரன், Dip in Accy. யாழ்ப்பாணத்தில் சகல முன்னணி புத்தகசாலைகளிலும் கிடைக்கும். விலை ரூபா 40.00. (6711)

### கண்டியில் பிரசாரம் ஆரம்பம்

கொழும்பு, செப். 23 ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தைப் பிரதமர் பிரேமதாச அடுத்த மாதம் 10ஆம்திகதிகண்டியில் அங்குரார்ப்பணம் செய்வார் என்று அறிவிக்கப்படுகின்றது.

அதற்கு முன்னர் தலதா மாளிகையில் நடைபெறும் சமய வைபவங்களில் அவர் கலந்து கொள்வார். (இ-எ)

---

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்- இலங்கை

## பொதுப்பட்டமளிப்பு - 1988

டிப்ளோமாக்கள் / பட்டங்கள் / பட்டப்பின் டிப்ளோமாக்கள் / முதுமாணி/ கலாநிதி ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 1988 கார்த்திகை மாதம் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் பொதுப் பட்டமளிப்பு நடைபெறும், பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்தவர்கள் கீழ் குறிப்பிட்டுள்ள திகதிக்கு முன்னர் தமது வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.

(1) கலாநிதித் தேர்வு.
(2) முது தத்துவமாணித் தேர்வு.
(3) முது கலைமாணித் தேர்வு.
(4) முது விஞ்ஞானமாணித் தேர்வு.
(5) கல்விப் பட்டப்பின் டிப்ளோமாத் தேர்வு 1987.
(6) விஞ்ஞானமாணித் தேர்வு 1987.
(7) கலைமாணித் தேர்வு 1987.
(8) வணிகமாணித் தேர்வு 1987.
(9) தொழில் நிர்வாகம் தேர்வு 1987.
(10) ஆயுள்வேத சத்திரசிகிச்சை டிப்ளோமாத் தேர்வு 1987.
(11) சங்கீதம்/ பரதநாட்டியம் டிப்ளோமாத் தேர்வு 1987.
(12) மருத்துவமாணித் தேர்வு 87 / 88.

மேற் குறிப்பிட்ட தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் 15. 10. 88 க்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். வேண்டுகோட் படிவங்களையும் மற்றும் விபரங்களையும், முத்திரை ஒட்டிய 23 × 10 செ. மீற்றர் அளவுடைய, சுய முகவரியிட்ட கடித உறையை. சிரேட்ட உதவிப் பதிவாளர்/ தேர்வுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது வழமையான வேலைநேரங்களில் தேர்வுக் கிளைக்கு நேரடியாக வந்தோ பெற்றுக்கொள்ளலாம். குறிப்பிட்ட திகதிக்கு கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதில் பதிவாளர்.

(C/263)

---


# எச்சரிக்கை

## வாடிக்கையாளர்களே!

உங்கள் அபிமான சிக்மா மின் மோட்டர்களை வாங்கும்போது மிகவும் அவதானித்து வாங்கவும். நாம் உற்பத்தி செய்யும் எல்லா பம்ஸிலும் "CEYGMA" என்ற பெயர் பொறிக்கப்பட்டிருக்கும்.



- போலியான நீல நிற பம்புகளை வாங்கி ஏமாறுநீர்கள்
- "CEYGMA" என்ற பெயரைப் பார்த்து வாங்குங்கள்

**CEYGMA PUMPS**
**சிக்மா பம்ஸ்**
**United Agro Engineering**
274/1, ஆஸ்பத்திரி வீதி,
பெரியாஸ்பத்திரி முன்பாக
யாழ்ப்பாணம்.


---

## அறிவித்தல்

12-08-87 ஆம் திகதி ஈழநாட்டு பத்திரிகையில் இல. 59, 61, 63 மின்சார நிலைய வீதியில் உள்ள டாக்டர் கோபாலபிள்ளையின் மாடிகளை திரு. சுப்பிரமணியம் கலாநாதன் பொறுப்பில் விடப்பட்டுள்ளதென்று பிரசுரிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட கட்டிடங்கள் எங்களுக்கு சொந்தமான கட்டிடங்கள், எங்கள் பொறுப்பில் இருக்கிறதென்றும், குறித்த சுப்பிரமணியம் கலாநாதனுடைய பொறுப்பு நீக்கப்பட்டுள்ளதென்றும், குறித்த கட்டிடங்களுக்கும் குறித்த சுப்பிரமணியம் கலாநாதனுக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்றும் இத்தால் அறியத்தருகிறோம்.

திருமதி சத்தியவதி சேனாதிராஜா
செல்வி சிவஞானம் கோபாலபிள்ளை
(6731)

---

## ஈழத்தாய் தவப்புதல்வன் திலீபா

அன்னையின் மடியில்: 29-11-1963
மக்களுக்கு சமர்ப்பணம்: 26-09-1987

ஈழத்தமிழர் விடிவிற்காய்
வீரத்தாய் மைந்தனவன்
திண்ணமிக்க தீரத்தால்
தியாகத்தை உயர்த்திய
தியாக தீபம் திலீபனை
என்றும் நினைப்போமே!

அராலி கிழக்கு மக்கள்.

(C-265)

---

### மாடுகள் கண்ணியில் சிக்கின!

காரைநகர், செப் 23 காரைநகர் கடற்படை முகாம் எல்லையில் பாதுகாப்புக்காக புதைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியில் சிக்கி மாடுகள் இறக்கின்றன.

கடந்த திங்கட்கிழமை கண்ணியில் சிக்கி இரண்டு மாடுகள் இறந்தன, நான்கு மாடுகள் கால்களை இழந்தன.

இச் சம்பவத்தை அடுத்து வெளியில் வந்த கடற்படையினர் பிரதான வீதியால் சென்ற பயணிகள் பஸ்ஸை மறித்து சோதனை நடத்தினர். (ஒ-73)

### பஸ் சேவை இல்லை

வடமராட்சி செப் 23 திலீபனின் நினைவு நாளின் இறுதித் தினமான 26 ஆம் திகதி பருத்தித்துறை, இலங்கைப்போக்குவரத்து பஸ் சேவையும் நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-160)

### சட்டமாணிப் பட்டம் பற்றி ஆலோசனை கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 23 யாழ்ப்பாணம் திறந்த வெளிப்பல்கலைக்கழகபிரதேச நிலையத்தில் 1988/ 1989 ஆம் ஆண்டுக்கான எல்.எல்.பி (சட்டமாணிப்பட்டம்) துவங்குவது சம்பந்தமான முக்கிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று 25ஆம் திகதி ஞாயிறுக்கிழமை முற்பகல் 10மணி அளவில் திறந்த வெளிப்பல்கலைக் கழக பிரதேச நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அக்கூட்டத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து சட்டமாணிப் பட்டப் படிப்புக்கு விண்ணப்பித்த சகல விண்ணப்பதாரர்களும் சமுகம் அளிக்குமாறு கோரப்படுகின்றனர். (இ)

### ஐ. தே. க. சிறப்பு மாநாடு

கொழும்பு, செப். 23 ஐக்கிய தேசியக்கட்சியின் சிறப்பு மாநாடு அடுத்த மாதம் 9ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது.

கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் பிரேமதாசா அன்றையதினம் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

★ வாழ்க்கைச் செலவைக் குறைப்பது
★ வேலை வாய்ப்புக்களை அதிகரிப்பது.
★ பொருளாதார, சமூக அபிவிருத்தித் திட்டம்.

இவற்றைக் கொண்டதாக புதிய விஞ்ஞாபனம் இருக்கும் என்று கூறப்படுகின்றது. (இ-எ)

---

## ஓராண்டு நினைவு அஞ்சலி



**உண்ணாமல் இறந்த வீரா!**
**எந்நாளும் உன் அடி தொழுவோம்**

மூத்த தமிழவள் அன்னை
முகம் நிமிர்ந்து திலகம் சூட
உனை முதற்பலி யாக்கிய வீரா!
புது யாத்திரை தொடர்ந்த பார்த்திபா
விடுதலை தேடிய பறவை
தன் சிறகினை இழந்ததும் ஏனோ!
ஊரெழு தந்த உறவை
ஒரு கணமதில் மறந்ததும் ஏனோ!
திலீபன் என்றொரு மழலை
இன்று மண்ணில் சாய்ந்தது உடலை!
அது தேடிப் பறந்தது விடிவை!
தன் நாவில் உரைத்தது முடிவை

மனோ — சந்திரா
நல்லூர் பலநோக்கு கூட்டுறவு
ஊழியர் சங்கம்,
திருநெல்வேலி.
(6586)

---

# ஓ! திலீபா!




விண்முகடு தாழ்ந்தாலும் வேதங்கள் அழிந்தாலும்
நித்தியமாய் நிர்மலமாய் நின்றொளிரும் திருவிளக்கே
உன்னுயிரை உன்னினத்தின் விடிவுக்காய் ஈந்த பெருந்
தியாகத்திருவிளக்கே! தமிழினத்தின் உள்ளுயிரிற்
கனவேற்றி அகிம்சைநெறி காட்டியவக் காந்தியையும்
புறங் கண்டு உண்ணாநோன் பிதுவென்று உணர்த்தியெம்
அடிமை விலங் குக்கினியாய்ப் போதுவென ஆகுதியாய்
புலிகள் வேள்வியிலே புதுமையொன்று படைத்தவனே!
விண்ணடைந்து நீ நின்றாலும் உன்றன் உயிர் மூச்சு
ஈழவர்தம் உள்மூச்சாய் என்றும் உயிர்க்கிறது!
என்றுமே எம்முடனே வாழ்கின்றாய் - உன் கொள்கை
உன்னுரைகள் எங்கள் மனத் தகளியின் சுடர் விளக்கு!

**மக்கள் புரட்சி வெடிக்கட்டும்.**
**சுதந்திர தமிழீழம் மலரட்டும்.**

நாவற்குழி வர்த்தகர் சங்கம்
(6735)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகி லெப்டினன்ட் கேர்ணல் திலீபன்



"புரந் தார் கண் நீர் மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்து கோள் தக்க துடைத்து" -குறள்

(தன்னைத் தாங்கும் தலைவனும், தன்னயலில் பார்த்து நிற்பவர்களும் கலங்கிக் கண்ணீர் விடும்படி ஒரு வீரன் தன் இன்னுயிரை ஒரு சிறந்த குறிக்கோளுக்காக ஈவானேயானல், அத்தகைய சாவு இரந்தாயினும் தவஞ் செய்தாயினும் பெறத்தக்கதே.)

சுன்னாகம் வர்த்தகர் சங்கம், சுன்னாகம் வாழ்பொதுமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்டோபர் முதல் புதிய திட்டம்

# சம்பளக் காசோலைகளை அதிபர் எழுதி வழங்குவார்

பலாலி, செப். 23

ஆசிரியர்களின் சம்பளப்பணம், அக்டோபர் மாதம்முதல் அவ்வப் பாடசாலைகளின் அதிபர்களினுல் காசோலைகளில் எழுதப்பட்டு வழங்கப் படவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலையும் பாடசாலையின் பெயரில் அதிபர், உபஅதிபர், சிரேஷ்ட ஆசிரியர் ஒப்பமிடத்தக்க வகையில் பாடசாலைக்கு அண்மித்ததும் வசதியானதுமான வங்கி ஒன்றில் கணக்கொன்றை ஆரம்பித்துக் கொள்ளவேண்டுமெனயாழ். கல்வித் திணைக்களக் கணக்காளர் திரு. ஆர். சுகுணதீஸ்வரன், சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்.

மூவர் ஒப்பமிடமுடியாத பாடசாலைகளான இரண்டு ஆசிரியர்களையும், ஓர் ஆசிரியரையும் கொண்ட பாடசாலைகளுக்கு அப்பாடசாலையின் கொத்தணி மூலாதாரப் பாடசாலையூடாக காசோலைகளை வழங்கும் சாத்தியக்கூறுகள் பற்றியும் ஆராயப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது. (ச—119)

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி செல்வம் செல்லம்மா

மண்ணுலகில் 11-10-1947 — விண்ணுலகில் 23-09-1979

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருந்த எங்கள் குலவிளக்கே! எங்களை எல்லாம்துயரத்தில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புச் செல்ல அம்மாவே உங்கள் முகம் எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலாதம்மா. உங்கள் ஆத்ம பசாந்தியடையஇறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்
**கணவன், பிள்ளைகள். பெற்றோர்.**

பெரியகுளம்
நெடுங்கேணி. (6721)

புதுக்குடியிருப்பு விவசாயிகள் தமது டிராக்டர்களை

# தினமும் இரு மணி நேரம் மட்டுமே பயன்படுத்த அனுமதி

புதுக்குடியிருப்பு, செப் 23

புதுக்குடியிருப்பு விவசாயிகள் தங்கள் விளைபொருள் களைவீடுகளுக்கு எடுத்துச் செல்வதற்கு டிராக்டர், றெயிலர் (பெட்டி) என்பனவற்றை தினமும் 2 மணித்தியாலயங்கள் பயன்படுத்த அமைதிப்படையினர் அனுமதி அளித்துள்ளனர்.


புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அமைதிப் படையினரின் தேடுதல் நடவடிக்கை தீவிரப் படுத்தப்பட்டதை அடுத்து டிராக்டர் பாவிப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இதனுல் விவசாயிகள் தங்கள் விளை பொருள் களைக்கொண்டு செல்ல பெரும் சிரமம் ஏற்பட்டிருந்தது.

இவர்களது குறைபாடுகள் பற்றி பிரசைகள் குழுவினர், புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் திரு. அ. இராசரத்தினம் ஆகியோர் அமைதிப்படையினருக்கு தெரிவித்ததை அடுத்து விளை பொருள் களைக் கொண்டு செல்ல மட்டும் டிராக்டர் றெயிலர் என்பவைற்றை இரண்டு மணித்தியாலம் வரை பாவிக்க அனுமதிக்கப்பட்டது.

எனினும் போகும் போதும் திரும்பி வரும் போதும் அமைதிப்படையினரிடம் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. (க-126)

## ஓராண்டு நினைவஞ்சலி



குமாரசாமி தெய்வேந்திரம்

மண்ணில்: 12-09-1945 — விண்ணில்; 05 .0-1987

அன்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய் எம்முடன் வாழ்ந்து எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் வழிநடத்தி எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திய அன்புத் தெய்வமே! ஓராண்டு பூர்த்தியாகிய இன்று உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பெற்றோர்,
சகோதரி, சகோதரர்கள்.

ஏழாலை மேற்கு, ஏழாலை. (6579)

# பொருட் செல்வத்தை விட கல்விச் செல்வம் முக்கியமானது

கோப்பாய் செப் 23

இன்றைய சூழ்நிலையில் மாணவர்கள் அமைதியான சூழலில் கல்வியைப் பெறுவது மிகவும் கடினமாயுள்ளது. எனினும் இவ்வாறான கல்வி நிலையங்களிலேயே மாணவர்கள் அமைதியாகக் கல்வியை கற்க முடிகிறது. ஒரு நாட்டின் பொருட் செல்வத்தை விட கல்விச் செல்வம் முக்கியமானது.

அச்சுவேலி குகன் கல்வி நிலயத்தின் ஆண்டு 12 ஆம் 13 ஆம் வகுப்புகளின் ஆரம்ப விழாவில் உரையாற்றிய இந்து நாகரிக விரிவுரையாளர் திரு. காரைசுந்தரம் பிள்ளை மேற்கண்டவாறு கூறினர்.

கல்வி நிறுவனத்தின் இயக்குநர் திருச. குகதாசன் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

நிறுவன இயக்குநர் தமது உரையில் " இப்பகுதியிலுள்ள மாணவர்கள் கல்விக்காக யாழ்ப்பாணத்தைநாடவேண்டியுள்ளது. இதனை மாற்றி யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் விரிவுரையாளர்களை 3 ய நான் இங்கு விரிவுரையாற்ற ஒழுங்கு செய்துள்ளேன் என்றார்.

விழாவில் சிறப்புரையாற்றிய பொருளியல் விரிவுரையாளர் திரு லோகசிங்கம் இன்றைய கால நெருக்கடியில் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் மிகவும் வீழ்ச்சியடைந்து வருகிறது.

இந்நிலையில் எமது மாணவர்கள் தமது கல்வியில் மிகவும் அக்கறை காட்டவேண்டுமென்றார்.

தமிழ் விரிவுரையாளர் திருஞானத்தின் நன்றியுடன் விழா முடிவடைந்தது. (ச 72)

# பாடசாலை நேரத்தில் அதிபர்கள் வெளியே செல்வதைத் தவிர்க்கக் கோரிக்கை

'எனது கொத்தணி அமைப்பின்கீழ் அடங்கிய பாடசாலை அதிபர்கள் பாடசாலை வேளையில் எக்காரணம் கொண்டும் எம்மைச் சந்திப்பதன் பொருட்டோ வேறு காரணம் கொண்டோ வெளியே செல்வதைத் தவிர்க்க வேண்டும். அதிபர்கள் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் முன்மாதிரியாக நடக்க வேண்டும்.''

சாவகச்சேரி கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர்கள் கூட்டத்தில் கொத்தணி அதிபர் திரு. க. பாலச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. பாலச்சந்திரன் 'மேலும் கூறியதாவது;-

அதிபர்கள் பாடசாலையின் வளர்ச்சியிலும் சிறுர்களின் கல்வி முன்னேற்றத்திலும் கூடிய கவனம் செலுத்தி வருங் காலத்துக்குரிய சீரிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

பாடசாலை நேரசூசிக்கு அமைய பாடசாலை வேலைகள் கிரமமாக அமைய வேண்டும்.

கல்விப்பணிப்பாளர் மனைக்குக்கூட அதிபர்களோ உதவி ஆசிரியர்களோ செல்லத் தேவையில்லை.

குறைகள், தேவைகள் அனைத்தும் உங்கள் கொத்தணி அதிபர் மூலம் தெரியப்படுத்தலாம்.

என்னுடன் ஒத்துழைத்து கொத்தணி அமைப்புகளை பயன் உள்ளதாக அமைப்பது உங்கள் பாரிய கடமையாகும்.

இப்படி அவர் கூறினர். (ச- 75)

## மக்கள் முகம்

நீர்வேலி பிரசைகள் குழு நிர்வாகிகள்

குழுவின் பொதுக் கூட்டம் நீர்வேலி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற போது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. அ. ச. குமாரசுவாமி, உப தலைவர்; திரு. வி. சிவசுப்பிரமணியம், செயலாளர்: திரு. அ. அரசகுமார், உப-செயலாளர் திரு. க. துரைசிங்கம், பொருளாளர் திரு. த. பரராசசிங்கம்.

பத்துப்பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவானது. (இ-க)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அச்சுநகர்
சிங்கராசா அந்தோனிப்பிள்ளை

தோற்றம் 10-04-1924 — மறைவு 23 9-1984

மண்ணில் நீங்கள் மறைந்தாலும்
கண்ணில் நீங்கள் நடமாடும்
காட்சி தான் மறந்திடுமோ
எண்ணமதில் என்றும் நீங்கள்
எங்களுடன் வாழ்கின்றீர்கள்

எம்மையெல்லம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட அன்புத் தெய்வமே நீங்கள் மறைந்து நான்கு ஆண்டுகள் சென்றுலும் உங்கள் நினைவு எங்களது நெஞ்சை விட்டு என்றும் அகலாது.

உம்பிரிவால் வாடும்
அன்பு மனைவி, தாய், பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

'ரேஸ்மகால்'
அச்சுவேலி
(6715)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



சுழிபுரம் மேற்கு சின்னையா பாக்கியம்

மண்ணுலகு: 10.11.27 — விண்ணுலகு: 24.8.88

திதி: 23. 9. 88 (வெள்ளிக்கிழமை)

ஆழ்கடல் வற்றினுலும் அன்புக்கடல் வற்ருத எங்கள் அருமைக் குலவிளக்கே! அன்பின் சோதியே! கருணையின் சின்னமே! உந்தன் ஒளிவீசும் திருமுகத்தை எப்போ? எங்கே? இனியாம் காண்போம்? எங்கள் உயிருள்ளவரை தங்களின் நினைவலைகள் எம்நெஞ்சை விட்டு அகலாது. எம்மையெல்லாம் ஆருத்துயரில் மூழ்கவிட்டு, மீளாத்துயில் கொண்ட அன்புக் கடலே! தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்,
அன்புப் பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"மலரகம்"
சுழிபுரம் மேற்கு
சுழிபுரம். (6585)

## ஓராண்டு நினைவஞ்சலி



திரு. சிதம்பரப்பிள்ளை ஆறுமுகம்

இளைப்பாறிய விவசாய களஞ்சியப் பொறுப்பாளர்

தோற்றம்: 10-03-1931 — மறைவு: 20-09-1987

திதி: 23-09-1988

ஆறுமுகன் அழைத்தானே.

ஆறுமுகம் எனும் பெயர் கொண்டாய் அந்த
ஆறுமுகன் அடி சேர்ந்தனையோ? எமக்கு
ஆறுதல் சொல்ல யார்தான் உளரோ—ஐயா
ஊறுதே உம்நினைவு எம்முளமதில்.

கண்மணியாக எம்மைக் காத்து நின்றீர்-இன்று
விண் மணியாக விதந்து நின்றீர்-ஐயா இம்
மண்ணுலக வாழ்க்கை கசந்ததுவோ? — நாம்
பண்ணொடு பாட்டாயல்லவோ வாழ்ந்திருந்தோம்.

சாந்தமது உமது வதனமதில் வழியும்-உயர்
காந்தமென உமது கண்ணின் கருணைபொழியும் — இன்று உம் நினைவு
ஏகாந்தம் தேடி எவ்விடம்தான் சென்றீர்?
ஏந்தியே நாம் வாழ்வோம் இம்மண்ணுலகில்.

மனைவி, பிள்ளைகள், சகோதரி,
மைத்துனர், மைத்துனிகள்,
பெறுமக்கள், மருமக்கள்.

''வசந்த வாசம்''

## ஓராண்டு நினைவு அஞ்சலி



தியாகி திலீபனுக்கு எமது அஞ்சலிகள்!

வர்த்தகர் சங்கமும் பிரசைகள் குழுவும்,
பண்டத்தரிப்பு.

(6582)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அக்டோபர் 13,14 இல்**

## மாவட்ட ரீதியில் மெய்வல்லுனர் போட்டிகள்

பலாலி, செப் 23

யாழ். கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மாவட்ட மெய் வல்லுனர் போட்டிகள் அக்டோபர் மாதம் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொத்தணி ரீதியாகவும், வலயங்களாகவும் நடாத்தப்பட்ட போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்கள் மாவட்டப் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

மாவட்டப் போட்டிகளில் முதலாம் இடத்தில் வெற்றி பெறுவோர் மட்டுமே அகில இலங்கை ரீதியாக நடாத்தப்படும் போட்டியில் பங்கு பெற வாய்ப்பளிக்கப்படும் என அறியப்படுகின்றது.

(க-119)


## வெற்றுச் சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் சுமார் 3000 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரம்மூலம் விற்பனையாகவுள்ளது. இவற்றிற்கான விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் ரூபா 2/- செலுத்திப் பெற்ற விண்ணப்ப படிவங்களில், முத்திரையிடப்பட்ட உறைகளில்வைத்து 28-09-1988 புதன்கிழமைக்கு முன்னதாக சங்கக் காரியாலயத்தில் சமர்ப்பிக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வெற்றுச் சாக்குக்கான கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிடவும்.

கேள்விப்பத்திர பண வைப்பு ரூபா 500/-

– பொது முகாமையாளர்

அளவெட்டி – மல்லாகம் ப. நோ. கூ. சங்கம்

(C/260)



உ

குகமயம்

சரவணை தேவபுரம்

## ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில்

மேற்படி கோவிலில் புரட்டாதி மாத சனிக்கிழமைகள் தோறும் சனிக்கிரக ஆராதனை, ஹோமம் என்பன நடைபெறும். 08.10.1988 சனிப்பிரதோஷம் அன்று சனீஸ்வர அதிவிசேஷ சாந்தி இடம்பெறும் எனவே அடியார்கள் யாவரும் ஹோமத்தில் பங்கு கொண்டு சனீஸ்வரதோஷம் நீங்கி அருள் பெற்று உய்யுமாறு வேண்டுகிறோம்.

மேற்படி ஆராதனைகள் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ - தி - சோமாஸ்கந்த குருக்கள் தலைமையில் இடம்பெறும்.

ஆலய பரிபாலன சபையினர்.

( 6723 )



விசேட

## ஆங்கில வகுப்பு

To help you begin, build up & enrich your English

**AN INTEGRATED ENGLISH COURSE**

2ஆவது பிரிவு

ஆரம்பம்: 01-10-1988

6 மாத கால தீவிரப் பயிற்சி

ஆசிரியர்:

**திரு. T. N. பஞ்சாட்சரம்**

பாடத்தொகுதி:

ENGLISH SPEECH PRACTICE
GRAMMAR & USAGE
VOCABULARY ENRICHMENT
READING WITH UNDERSTANDING
PRACTICE IN WRITING & CORRESPONDENT.

★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்.
★ வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்.

முற்பகல் 10 — 12 மணி வரை.

விவரங்களுக்கு:

**ASTAN Institute**

166/1, HOSPITAL ROAD,
JAFFNA.
(A.S. சங்கரப்பிள்ளை கட்டிடம், 1ஆம் மாடி.)

(C199)


# முல்லைத்தீவு மாவட்ட தென் கீழ்பகுதி அகதிகள் திரிசங்கு நிலையில்

## 1984 இல் வெளியேற்றப்பட்டோரை கவனிக்க எவரும் இல்லையா?

ஈழத்தமிழர்களில் அகதிகளானோர் பலர் அகதிகள் ஆக்கப்பட்டோர் பலர் மட்டக்களப்பு, திருமலை, வவுனியா, மன்னார் யாழ்ப்பாணம் மாவட்டங்களிலுள்ள தமிழ் மக்களும் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒருபகுதியினரும், சிறீலங்கா இராணுவத் தாக்குதலினாலும், இந்திய அமைதிப் படையினரின் அடாவடித் தனத்தாலும் இயல்பாகவே இடம்பெயர்ந்து அகதிகளாகினர்.

ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்தின் தென் கீழ்ப்பகுதியாகிய தென்னமரவாடி, கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய், காயாடிக்குளம், நாயாறு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சிறீலங்கா அரசினால் வலிந்து கட்டாயத்தின் பேரில் வெளியேற்றப்பட்டு அகதிகளாக்கப்பட்டனர்.

இங்ஙனம் அகதியான மக்கள் அளம்பில், குமுளமுனை, முள்ளியவளை, வற்றாப்பளை, செம்மலை, தண்ணீர் ஊற்று, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, வட்டுவாகல் ஆகிய பகுதிகளில் தஞ்சம் புகுந்தனர்.

### 1984 இல்

1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் நாள் வலுக்கட்டாயத்தின் பெயரில் அடித்தும், பயமுறுத்தியும் வெளியேற்றப்பட்ட இவ்வகதிகள் மேற்கூறப்பட்ட இடங்களில் தஞ்சம் புகுந்தபோது மிகப்பரிதாபகரமான வசதியீனங்களுக்கு ஆளாகினர்.

எந்த உடைமைகளையும் எடுத்துக் கொள்ள முடியாத நிலையில் உடுத்த உடையுடன் படுக்கப் பாயுமில்லாதவர்களாக, தஞ்சம் புகுந்த இடங்களில்,- கோவில் மண்டபங்களிலும், பாடசாலைக் கட்டடங்களிலும், வீதிகளிலும், வீட்டோரத் திண்ணைகளிலும், மாட்டுத் தொழுவங்களிலும், மரநிழல்களிலும் தங்கினார்கள்.

உண்ண உணவின்றியும், உடுக்க உடையின்றியும் தவித்துக்கொண்டிருந்த இவர்களுக்கு முல்லை மாவட்டப் பிரசைகள் குழு அவசர கால உணவு வழங்க முன் வந்ததும். அவ்வப் பகுதி பொது மக்களின் ஆதரவு கிடைத்தமையும், தர்ம ஸ்தாபனங்கள் சிலவற்றின் தயவும் இவர்களை உயிர்வாழ வைத்தது எனலாம். அரசாங்கம் நிவாரண உணவுப்பொருள் வழங்கியது இவர்களுக்கு ஓரளவு ஆறுதலைத்தந்தது.

காலப்போக்கில் அகதிகள் முகாம்கள் அமைக்கப்பட்டு அவற்றில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சிலர் தமது முயற்சியினால் சிறு குடிசைகளை அமைத்து வாழ்கின்றனர்.

### எப்போது திரும்புவது

இவர்கள் தங்கள் அகதி நிலையில் இருந்து நீங்கி தத்தம் சொந்தக் கிராமங்களுக்குச் சென்று வாழ்வது எப்போது என அங்கலாய்த்தனர்.

இதன் காரணமாக ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள், மறியல் போராட்டங்கள் போன்றவற்றை எல்லாம் நடைமுறைப்படுத்தி அரசாங்க அதிபர், சிறீலங்கா அரசு, இந்தியப் பிரதமர் ஆகியோருக்கு அவ்வப்போது அறிக்கைகளையும் சமர்ப்பித்தனர்.

இச்சாத்வீகப் போராட்டங்களால் கூட எந்த வித பலனும் கிட்டாத நிலையில் 1987 ஆம் ஆண்டு இந்திய அமைதிப் படையினர் இலங்கைக்கு வருகை தந்த ஆரம்பத்தில் முல்லைத்தீவு இந்திய அமைதிப் படை பொறுப்பதிகாரி டாட்டா அவர்களின் ஆதரவுடனும், முல்லைத்தீவு மாவட்டப் பிரசைகள் குழுவின் அனுசரணையுடனும், தத்தம் கிராமங்களைச் சென்று பார்வையிட்டனர்.

அங்கு வீடுகள் அனைத்தும் தரை மட்டமாக்கப்பட்டும், உடைமைகள் அனைத்தும் சூறையாடப்பட்டும், அழிக்கப்பட்டும் சுடுகாடுபோல இருந்த தமது கிராமங்களைப் பார்த்துக் கண்ணீர் மல்கினர்.

கொக்கிளாய்மக்களின் குல தெய்வமான அம்மன் ஆலயம் உடைக்கப்பட்டும், சிதைக்கப்பட்டும் காணப்பட்டன. ஆலயத்தின் வீதிகளிலும் முன்றலிலும் ஆவினங்கள் பல பத்திய பா... [illegible] நூற்றை அரக்கத்தனமாகக் கொலை செய்து தமக்கு உணவாக்கிக் கொண்ட ஸ்ரீலங்கா இராணுவம் அவற்றின் எஞ்சிய பகுதியாகிய எலும்புகளையும், கொம்புகளையும் ஆங்காங்கு குவித்து வைத்திருக்கும் கொடூரச் செயலைக்கண்டு குமுறிக்கலங்கினர்.

ஆவினங்கள் அழிக்கப்பட்டது ஒரு புறமும் ஆலயச்சூழல் அசூசியாக்கப்பட்டமை மறுபுறமுமாக எண்ணியெண்ணி ஏங்கினர். அத்தோடு பல்லாயிரக் கணக்கான தென்னை மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டிருந்த நிலைகண்டு விரக்தியுற்றனர்.

மேலும் தமதுசொந்த நிலபுலன்கள்ஸ்ரீலங்கா அரசினால் அத்து மீறிச் செய்யப்பட்ட சிங்களக் குடியேற்றத்திற்குப் பயன்படுத்தப்பட்டமை கண்டு மனம் பொறுக்க முடியாத நிலையில் வாய்விட்டுக் கூட அலறினர்.

"இந்த அத்துமீறிய சிங்களக் குடியேற்றம் எம்மை எல்லாம் வலுக்கட்டாயமாகவெளியேற்றிய பின்னர் அதாவது 1984 ஆம் ஆண்டுடிசம்பர் 22ஆம்திகதிக்குப்பின்னர் செய்யப்பட்டது.

இக்குடியேற்றத்தினால் பாரம்பரிய தமிழ்ப் பிரதேசம் பறிபோவதுமட்டுமல்லாமல் தனிப்பட்ட முறையில் எமக்குச் சொந்தமான நிலங்களைக் கூடப் பறிகொடுத்த நிலை எமக்கேற்பட்டுள்ளது" என இந்திய அமைதிப்படை அதிகாரியிடம் முறையிட்டனர்.

இதே சமயம் முல்லை மாவட்டப் பிரசைகள் குழுப் பிரமுகர்கள் "வெலி ஓயா" என வழங்கும் இவ் அத்து மீறிய சிங்களக் குடியேற்றப் பகுதி முல்லைத்தீவு மவட்டத்துக் குரியபகுதி எனவும் இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் வலுக்கட்டாயமாகவெளியேற்றப்பட்ட பின்னர், பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் முதலாக எவருக்குமே தெரியாத வகையில், வட மாகாணத்தைச் சேர்ந்த இப்பிரதேச நடவடிக்கை, வட... சேர்ந்த அனுராதபுர அரசசெயலகத்தில்திட்டமிடப்பட்ட ஒரு சதித் திட்டமெனவும் அதிகாரிக்கு விளக்கிக் கூறினர்.

இவற்றை எல்லாம் செவியுற்று அதிகாரி மக்களுக்கும் பிரசைகள்குழுவினருக்கும்ஏற்ற முயற்சிகள் மேற்கொள்ளப் படுமெனக் கூறினர்.

### டில்லியில் இருந்து

இதனைத் தொடர்ந்து டில்லியில் இருந்து வெலிஓயா சம்பந்தமான கருத்துப் பரிமாறல்களுக்காக வருகை தந்த உயர் மட்டக் குழுவினரின் வேண்டுகோளுக்கமைய அக் குடியேற்றத்தினுள் அடங்கிய பிரதேசம் தமிழரின் பாரம்பரிய பிரதேசம் என்பதனை உறுதிப்படுத்தக் கூடிய அத்தாட்சிகளை முல்லை மாவட்ட பிரசைகள்குழு அவர்கள் முன் சமர்ப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நடவடிக்கைகளின் பின்னரும் இம் மக்கள் மீளக்குடியமர்த்தப்படாமையும் "வெலி ஓயா" சம்பந்தமான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப் படாமை வேதனைக்குரிய தாகும்.

திருமலையைச் சேர்ந்த அகதிகள் முல்லைத்தீவுப் பகுதியில் இருந்து திருமலைக்கு மீளக்குடியமர்வதற்காக அனுப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்த ஈழத்தமிழ் அகதிகள் விரும்பியோ விரும்பாமலோ அழைத்து வரப்பட்டு மீளக்குடியமர வைக்கப்படுகின்றனர்.

இவர்களுக்கு மேலும் பல வசதிகள் செய்து கொடுப்பதாகப் பத்திரிகைகள் பகர்கின்றன, இந்நிலையில் சொந்த மாவட்டத்திலேயே அதாவது முல்லைத்தீவுமாவட்டத்திலேயே வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டு அகதிகளாக்கப்பட்ட தென்னமரவடி, கொக்கிளாய், கருநாட்டுக்கேணி,கொக்குத்தொடுவாய், காயாடிகுளம், நாயாறு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களின் நிலை திரிசங்கு சொர்க்கம் தானா?

இலங்கையில் அமைதியும் சுமுகமான வாழ்வையும் நிலை நாட்ட வந்த இந்திய அமைதிப் படையினர் இவர்கள் விடயத்திலும் "வெலி ஓயா" அத்து மீறிய சிங்களக் குடியேற்றத் திட்ட விடயத்திலும் அக்கறை காட்டுவார்களா.....?

★ ★ ★

**பொ . சேதுபதி**

(தலைவர், முல்லைத்தீவு பிரசைகள் குழுக்கள்)

யாழ். பல்கலைக் கழகம்:

## வர்த்தக மாணிப் பட்டப் பரீட்சை 1987 இல் சித்தியடைந்தோர்

யாழ் பல்கலைக் கழகத்தினால் 1987 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட வர்த்தக மாணிபட்டப் பரீட்சையில் சித்தியடைந்தோர் வருமாறு:-

முதலாம் வகுப்பு.

ரி. குணநேசன்.

இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு) என். இந்திராவதி, கே. ஜெகதீஸ்வரன், கே. மோகனராஜா, எஸ் பரிமளாதேவி, ரி சத்தியபாலன், எம். சி செரீமன், என், சரோஜினிதேவி, கே. சிரோன்மணி, செல்வி ஆர். ஏ. டி. மடோனா, பீ. டி. சி. சின்னையா.

2 ஆம் வகுப்பு(கீழ்ப் பிரிவு) ஜி. பாலாம்பிகை, ரி. தேவிப்பிரசாதம், செல்வி எம். இ. [illegible] டொமினி, என். கீதா, செல்வி பி.எம். ஜோசப். ஜி. கமலநாதன், எம்.ஐ. மொகமட் மன்சூர், கே. புசேந்திரன், கே. சந்தணம், நி. சண்முகநாதன், செல்வி எம் ஐ. எஸ் நிகரா, செல்வி எஸ். இராஜநாயகம். கே. ஸ்ரீஸ்கந்தகுமார்.

பி மகேந்திரன், என், முரளிகிருஷ்ணன், ஏ. யோகேஸ்வரன், எம். ஜே. மொகமட் அஸ்மி, எஸ். பாலராஜா, ஏ. என். கார்த்திகேயன். எஸ். ஏ. பெலீசியா. ரி. கணேஷ், எஸ் இந்திராணி, ஏ. பீ. ஸ்சடீன், ஜே. ஜூட் றொபின், ச. கமலகுமாரி, பீ.கமலலோஜினி, ரி. கமலாவேணி, கே. மங்களேஸ்வரன், ஜே. மோகன், [illegible] வார், எ. சி. எம் நிவாத், [illegible] எம். ஏ. முகமட் றூமி, ஐ. எல். எம். ஜலால்டீன்.

கே. மோகனரஞ்சினி, சி. நியூட்டா, ஜே. நர்சூக், கே. பரமநாதன், ஆர். பி. ராஜமித்திரன், செல்வி ஆர். பூபால பிள்ளை, என். ராதாமணி, என். ரூபிகா, ஏ. சியாளு, ஆர். சிவயோகம், என். தவராணி, எஸ். தெய்வியராணி.

செல்வி டி. என்.தியாகராஜா, எஸ் திருமுருகா, கே. வசந்தினி, ஐ. எல். தொவீக், எம். விச்கினேஸ்வரன். ஐ. அரசரத்தினம், எஸ். ஞானசேகரன், ரி. விமலேஸ்வரன், எஸ். குமார், செல்வி ஏ. எஸ் முனவரா, கே. பரராஜலிங்கம்

[illegible] தேர்வு முடிவு தடை [illegible] உள்ளது.

### மாங்குளம் ஒட்டுசுட்டான் பஸ் சேவை

மாங்குளம், செப் 23

மாங்குளத்திலிருந்து ஒட்டுசுட்டான் வரை பஸ்சேவை நடைபெற அமைதிப்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதே போன்று பரந்தன் வீதியால் புதுக்குடியிருப்பு வரை பஸ்சேவை நடைபெறுகிறது.

புதுக்குடியிருப்புக்கு உள்ளும் ஒட்டுசுட்டானுக்கு- உள்ளும் பஸ் சேவைகள் தற்பொழுது நடைபெறும் சாத்தியக் கூறுகள் தெரியவில்லை.

(ச 94)

## வாசகர் திருமுகம்

### சொந்த நாட்டை மறந்து வாழும் நிலை மாறவேண்டும்

திரு. நா. மாணிக்கம் இடைக்காடர் அவர்களால் எழுதப்பட்ட லண்டன் அனுபவம் என்ற கட்டுரை சஞ்சீவி வார இதழில் பிரசுரமாகி இருந்தது.

எங்கள் சேவாச்சிரமம் கடந்த 20 ஆண்டுகள் இதே எண்ணங்களை மையமாக வைத்து இயங்க வாய்ப்பு அளித்தவர்களில் பலர் வெளிநாட்டு அன்பர்கள்.

வெளிநாட்டில் மோகம் கொண்டு பலர் நமது நாட்டை மறந்து வாழும் சீர்கேடு மிகவும் வருந்தத் தக்கது. எங்கள் மக்கள், பலர் சிரமங்களில் வாழுகிறார்கள். அவர்களுக்கு சாதாரண வசதி தானும் இல்லை.

உதாரணமாக கரவெட்டியில் மத்தொனி என்ற கிராமத்தில் இன்று தண்ணீர் பிரச்சனை உண்டு. அங்கு நாங்கள் சேவாச்சிரம மூலம் பாதிக்கப்பட்ட ஒருவருக்குவீடு கட்டுகிறோம். அங்கு நான் பலதடவை சென்று உள்ளேன். அங்கு போகும் தெருக்களின் நிலை மிகவும் கேவலம், மேலும் அங்கு நான் பார்த்த குழந்தைகள் பலர் ரொம்பவும் மெலிந்து காணப்பட்டார்கள்.

இக் கிராமத்தில் உள்ள ஒரு குளத்தைப் பெரிது படுத்தி, பல திட்டங்களை உருவாக்க திரு. நா. மாணிக்க இடைக்காடர் போன்ற அநுபவம் உள்ள பெரியவர்கள் முன்னுக்குவந்து உதவி செய்ய வேண்டும்.

இதே பேன்று பல கிராமங்கள் இருக்கின்றன. பொதுவாகப் பணம்படைத்தவர்கள்புகழுக்குக்காக எதையும் தங்கள் நலன் கருதிச் செய்யும் நிலை இருக்கிறது. இக் கட்டுரையை பல வெளிநாட்டு அன்பர்களுக்கு அனுப்ப முடிவு செய்துள்ளோம். நாட்டுப் பற்று வர சாத்தியக் கூறுகள் உண்டு.

அரசியல் தீர்வு நிரந்தமான முடிவைக் கொண்டு வருமானால் பலர் திரும்பலாம் என்பது எங்கள் கருத்து.

நல்ல எதிர்காலம் வரும் என்ற நம்பிக்கையை நாம் இழக்க வேண்டாம். எல்லாம் வல்ல ஆண்டவன் நமக்கு உறுதுணையாக நிற்பார்.

சுவாமி சித்ருபானந்தா

பருத்தித்துறை.


## பின் போடப்பட்டுள்ளது

25. 9. 88 ஞாயிற்றுக்கிழமை மு.ப.9 30 மணிக்கு நடைபெறவிருந்த கோப்பாய்- பலானை சண்ணகை அம்மன் கோவில் வருடாந்தப் பொதுச்கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்தி வைக்கப்பட்டு 02 10. 88 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9. 30 மணிக்கு நடைபெறுமென அங்கத்தவர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

இ. இராசரத்தினம்
தலைவர்.　　செயலாளர்
(6584)　　பரிபாலன சபை.



## உடனடி வேலைவாய்ப்பு
## AMERICIAN CO

1. A/C Technecian with experience
2. Construction Equipment Operator with exper.
3. Radio Technecian with exper.
4. Telephone Repair Tech exper.
5. Multi Craftsmen (plumping, Welding, gas, Carpenter & Painting)
6. Accounts Clerk must have exper.
7. Security Clerk must have exper.
8. T. V. Repair Tech.

நேர்முகப்பரீட்சை சனி, ஞாயிறு, திங்களில் நடைபெறும்.
சம்பள விபரம் நேரில் தெரிவிக்கப்படும்

**வீட்டுப் பணிப்பெண்கள் தேவை**

**BAHARIN
SAUDI ARABIA**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**P. SIRISKANTHARAJAH**
"PUSPA GIRI"
KALLADY LANE
CHAVAKACHCHERI.

**AL KAREEM LANKA**
17/1 A, DE FONSEKA ROAD,
BAMPALAPITIYA.
COLOMBO- 5

(6587)



**A/L 90 விஞ்ஞான மாணவர்கட்கு**

பொது இரசாயனம் ஆரம்பம் 25 - 09 - 1988
Sat, & Sun – 9.30 a.m

ஆசிரியர்: Mr. நாகரட்ணம் B.sc,

3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.　(C-259)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழிமூல சட்டமாணிப் பட்டப் பயிற்சி

## யாழ்.திறந்த பல்கலைக் கழகத்திலும் ஆரம்பிக்குமாறு கோரிக்கை

கரவெட்டி செப் 23 தமிழ்மொழி மூலமான சட்டமாணிப் பட்டப் பயிற்சி நெறியை யாழ்ப்பாணத் திறந்த பல்கலைக் கழகத்திலும் ஆரம்பிக்குக.

வட இலங்கைப்பண்பாட்டுக் கழகச் செயலாளர் திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம் மேற்கண்டவாறு இலங்கை திறந்த பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் டி. எஸ். விஜயசேகர திறந்த பல்கலைக் கழக மனித பண்பாட்டியல் சமூக விஞ்ஞானத்துறை பீடத்தலைவர் பேராசிரியர் திருமதி. சாவித்திரி குணசேகர ஆகியோரை மகஜர் மூலம் வேண்டியுள்ளார்.

மகஜரில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

''திறந்த பல்கலைக் கழகத்தின் பிராந்திய நிலையங்களில் நடைபெற்று வரும் ஏனைய பயிற்சிநெறிகளுக்கான புகுமுகப்பரீட்சைகள் அந்தந்த பிராந்திய நிலையங்களிலேயே நடத்தப்படுவது போன்று சட்டமாணிப்பட்ட பயிற்சி நெறிக்கான புகுமுகப் பரீட்சையையும் அந்தந்த பிராந்திய நிலையங்களிலேயே நடத்த ஒழுங்கு செய்ய வேண்டும். இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மகஜரின் பிரதிகள் உயர் கல்வி அமைச்சு நீதி அமைச்சு, பிரதேச அபிவிருத்தி இந்து சமய இந்துகலாசார தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சு, கிராமியகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ச- 70)

### மூன்ருவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு :
09-05-1930

உதிர்வு :
23-09-1985

திதி :
20-10-1988

சங்கித பூஷணம்

**கந்தையா குமாரசாமி**

(ஆசிரியர் மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்)

அன்பு அப்பா !
அன்பொடு அணைத்த ஆதவன்,
தட்டிக்கேட்ட தலைவனின்றிய
-தனியன்கள் நாம்
தத்தித் தத்தி அடிவைக்க உந்தும்
தளர்ந்துவிட்ட கால்களை பின்னிழுக்கும்
புகை எனும் பகை, அந்தகார இருள்,
அதில் கண்ணிலே அருவி.
கொடுமை எனும் வெம்மை, தகிக்கும்
அனல் காற்று அதில் சிவந்த கண்கள்
அப்பா! முழுதென மூன்ருண்டு முற்ருகத்தான்
ஓடிவிட்டது.
சிதையிலே மூட்டியதீ அணைந்துதான் விட்டது.
நம்பினேம் ! ஆனல்......
அதில் எழும் புகையா இது?
எதுவுமே புரியவில்லை.
கண்ணிலே இரட்டிக்கும் அருவி, அப்பா !
பதில் சொல்லிட வருவீர்களா?

சந்தன் திருவடி நீழலில் உங்கள்
ஆன்மா சாந்தியடைய இறைஞ்சுகின்றேம்.

இங்ஙனம்
''வேளசம்'' என்றும் உங்கள் நினைவில்:
மீசாலை தெற்கு, அன்பு மனைவியும்,
மீசாலை. ஆசைக் குழந்தைகளும்.
(6559)

### மட்டக்களப்பு டிப்போவுக்கு 3புதிய பஸ்கள்

மட்டக்களப்பு செப் 23 மட்டக்களப்பு இ. போ. ச. டிப்போவுக்கு இரு சொகுசு பஸ்கள் உட்பட மூன்று பஸ்கள் புதிதாகக்கிடைத்துள்ளன. (இ-21)

### 57பேர் கிழக்கைச் சேர்ந்தவர்கள்

மட்டக்களப்பு செப் 23 பூஸாமுகாமிலிருந்து அண்மையில் விடுதலையான 120பேரில் 57பேர் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட வாசிகள் ஆவர்.

சப்பல்வழியாக திருமலைக்கு கொண்டுவரப்பட்ட இவர்கள் ஹெலிக்கொப்டர் மூலம் அங்கிருந்து மட்டக்களப்புக்கு அழைத்துவரப்பட்டனர்.

பிரஜைகள் குழு இவர்களைப் பொறுப்பேற்று உறவினர்களிடம் கையளித்தது. (இ-21)

தான் கொண்ட இலட்சியத் திற்காக
அண்ணல் காந்தி அடியொற்றி தன்னுயிர் ஈந்த

## தியாகத் தீபம் திலீபனுக்கு அஞ்சலி!




" மக்கள் புரட்சி வெடிக்கட்டும்;
தமிழீழம் மலரட்டும் "

திலீபன் மரணப் படுக்கையில் இருந்து மக்களுக்கு விடுத்த கடைசிச் செய்தி.

— தமிழீழ மக்கள் சார்பில்

# தியாக தீபம் திலீபன்



ஈழத்தில்
அவதாரம்
29 - 11 - 1963

ஈழத்து மண்ணுக்காகத்
தியாகம்
26 - 09 - 1987

தன் நலத்தை யேமறந்து தியாகத்தாலே
தன் மானத் தமிழ்மகனுக உயிரைநீத்த
தன் நிகரில் லாவீரன் திலீபனிங்கே
தான் புரிந்த அகிம்சை வழிப்போராட்டத்தால்
தன்னையழித் தேவரலா ருகினனே
தானழிந்து மழியாத வாறுவாழ்ந்த
அன்னவனை யிங்கிழந்தோ மவன் நினைவாய்
அவன் புகழைப் பரப்பிடுவோ மதுவே நன்ரும்!

புற்றளை மத்திய சனசமூக நிலையமும்
வடமராட்சி மக்களும்

(C 70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு.

**பொருள்:**

வீரம், மானம், சிறந்த வழியில் நடக்கும் நடத்தை, தலைவரால் நம்பி தெளியப்படுதல் ஆகிய நான்கு பண்புகளும் படைக்குச் சிறந்தவையாகும்.


# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி 24805 32073
23-09-1988 த. வெ. இல 23


## நேரடி வெளிநாட்டு உதவி

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன், வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடந்த வைபவம் ஒன்றில் தெரிவித்த கருத்து, இவ்வேளையில் எல்லோராலும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஈழத்தமிழ் மக்களின் இன்னல்களுக்குத் தீர்வு காண மேற்கொள்ளப்படும் ஒப்பந்தத்தில், வெளிநாட்டு உதவிகள் நேரடியாக, வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்குக் கிடைக்கத் தக்க வகையில் ஓர் அம்சம் முக்கியமாக இடம்பெற வேண்டும். அப்படியில்லாத ஒப்பந்தத்தால் தமிழ் மக்களுக்கு விடிவு இல்லை— என்பதே அவர் தெரிவித்த கருத்தாகும்.

கடந்த பல வருடங்களாக இடம்பெற்ற நிகழ்வுகளால் தமிழ்ப்பகுதிகள் கல்வி, பொருளாதாரம், தொழில்வளம், உற்பத்தி உட்பட பல துறைகளிலும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஆகையால் சகல துறைகளிலுமே பாதிப்பை நிவர்த்தி செய்து, மேலும் கட்டி எழுப்ப வேண்டிய பணிகள் ஏராளம் உண்டு.

அதாவது புனர்நிர்மாணம், அபிவிருத்தி ஆகிய இரண்டும், சகல துறைகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டியவை. அவற்றை இலங்கை அரசாங்கம் எங்களுக்குச் செய்து தரும் என்று எவருமே நினைக்கவில்லை.

நாமே அவற்றைச் செய்ய வேண்டும். நாமே செய்வது என்றால், தேவையான நிதி வளம் எம்மிடம் உண்டா? இல்லை; சிறிதளவும் இல்லை. வெளிநாட்டு உதவி இல்லாமல் புனர்நிர்மாணப் பணிகளையோ, அபிவிருத்திப் பணிகளையோ செய்யமுடியாது!

பாதிக்கப்பட்டவர்களுக்கு, அபிவிருத்தி காண விரும்புபவர்களுக்கு உதவப் பல வெளிநாடுகள் காத்திருக்கின்றன. அத்தோடு எமது தாழ்ந்த நிலைப்பாட்டை எடுத்துச் சொல்வதன் மூலம் வெளிநாடுகளிடம் இருந்தும் உதவியைப் பெறக்கூடியதாக இருக்கும்.

ஆனால் அந்த உதவிகள் எல்லாம் தமிழ்ப் பகுதிகளுக்கு நேராக வந்து சேர வேண்டும். அந்த உதவிகளைப் பயன்படுத்தக் கூடியதாக இங்கு ஒரு தன்னாட்சி நிர்வாகம் வேண்டும்.

தன்னாட்சி நிர்வாகமும், வெளிநாட்டு உதவியும் ஒன்றுக்கு மற்றது தொடர்புடையதாக இருக்க வேண்டும். இல்லையேல் தமிழர் பகுதிகளைப் புனர்நிர்மாணம் செய்யவும் முடியாது; அபிவிருத்தி காணவும் முடியாது.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில், சுயாட்சி, குடியேற்றம், நேரடி வெளிநாட்டு உதவி என்ற வரிசைக் கிரமம் அவர்களின் முன்னணிப் பிரச்சினைகள் என்று சொல்லலாம்.

அதாவது தமிழர்களுக்கு வேண்டிய உரிமைகளில், அவர்கள் கேட்கும் உரிமைகளில், நேரடி வெளிநாட்டு உதவியும் ஒன்றாக முன்வைக்கப்பட வேண்டும்.

வெளிநாடுகள், கடன்வழங்கும் உலக நிறுவனங்கள், உலக வங்கி போன்ற அமைப்புகளிடம், அவை, தமிழ்ப் பகுதிகளுக்கு என்று வழங்கும் உதவிகள் முற்றாக இங்கு வந்து கிடைப்பதில்லை என்பதைப் புள்ளி விபரங்களுடன் தெரிவிக்க வேண்டும். நேரடி வெளிநாட்டு உதவி தமிழ்ப் பகுதிகளுக்கு வர வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானது என்பதை ஆதாரபூர்வமாக நிரூபித்து அவர்களை நம்பிக்கை கொள்ளச் செய்ய வேண்டும்.

இந்த வேலையைச் செய்வதற்கென்றே ஒரு சிலர் சேர்ந்து இயங்கலாம். வெளிநாட்டு உதவிகள் எந்த விதத்தில் தமிழ்ப் பகுதிகளுக்கு வந்து சேர்கின்றன என்ற புள்ளி விவரங்களைச் சேகரிக்கலாம். அவற்றை அடிப்படையாக வைத்து மகஜர்கள், பிரசுரங்களைத் தயாரித்து உதவி வழங்கும் வெளிநாடுகளுக்கு, நிறுவனங்களுக்கு அனுப்பலாம்.

பத்திரிகைகளில் செய்தி வெளிவருவதற்காக என்று அமைச்சர்களுக்கும் ஜனாதிபதிக்கும் கடிதங்களை எழுதிக் காலத்தைப் போக்குவதை விட, அடக்கமாகப் பணிபுரிந்து, இலங்கை அரசின் புறக்கணிப்பையும், பாகுபாட்டையும் வெளி உலகத்துக்கு அம்பலப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்வதற்கு எத்தனை பேர் முன்வருவர்?

### அவசரகாலச் சட்டம் பிறப்பிப்பு

மாஸ்கோ, செப். 22
சோவியத் யூனியனில் இரண்டு மாநிலங்களினால் உரிமை கோரப்பட்டுவரும் நொகொர்னோகரபா பகுதியில் அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டமும் அங்கு அமுல்நடத்தப்படுகிறது.

வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் ஆர்மெனியா, அஸர்பைஜான் மாநிலங்களுக்குச் செல்வதை, மாஸ்கோ அரசு தடைசெய்திருக்கிறது.

நொகொர்னோ கரபா பகுதிக்கு ஆர்மெனியா உரிமைகோரி வருகிறது.

# சுதந்திர பலஸ்தீன அரசு பற்றி
# இன்னும் இறுதி முடிவு இல்லை!

கெய்ரோ, செப் 22
சுதந்திர பலஸ்தீன அரசு ஒன்றை அமைப்பது பற்றி இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்று பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் தெரிவித்தார்.

## எகிப்து அதிபரை சந்தித்த பின் அரபாத் அறிவிப்பு

கெய்ரோவில் எகிப்து அதிபர் ஹொஸ்னி முபாரக்கை, அரபாத் நேற்று முன்தினம் சந்தித்து ஒரு மணித்தியாலம் வரை பேசினர்.

இஸ்ரவேலினால் கைப்பற்றப்பட்ட மேற்குக் கரையோரப் பிரதேச நிர்வாகத்தை ஜோர்தான் கைவிட்ட பின்னர் இரண்டு தலைவர்களும் சந்தித்துக் கொண்டது இதுவே முதல் தடவை.

அதன் பின்னர் அரபாத் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

அப்போது 'சுதந்திர பலஸ்தீன அரசு அமைப்பது பற்றி இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை' என்று அரபாத் சொன்னார்.

ஜோர்தானின் துணையோடு மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு இஸ்ரவேலுடன் பேசித் தீர்வு காணும்படி எகிப்து அதிபர் முபாரக் அரபாத்தைக் கேட்டுக்கொண்டார். (எ)

## கிளர்ச்சிக்காரர்களுடன் பேசத்தயார்!
### ஆப்கன் பிரதமர் அறிவிப்பு

மாஸ்கோ, செப் 22
எந்த இடத்திலும் கிளர்ச்சிக் குழுக்களுடன் பேச்சுக்கள் நடத்தத் தயாராக இருப்பதாக ஆப்கன் பிரதமர் மாஸ்கோவில் வைத்து அறிவித்தார்.

ஆப்கன் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் காபூல் அரசு உறுதியுடன் செயற்படுவதாகவும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதனிடையில் காபூல் அரசுச் செய்தி நிறுவனம் பாகிஸ்தான் அரசு தொடர்ந்து யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபட்டு வருவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளது.

பாகிஸ்தான் தனது இராணுவ அதிகாரிகளை அனுப்பி கெரில்லாக்களுக்கு உதவுவதாகவும் காபூல் நிர்வாகம் தெரிவித்திருக்கிறது. (எ)

### மரணப்படுக்கையில் மன்னர் ஹிரோஹிற்றோ

டோக்கியோ, செப், 22
ஜப்பானியச் சக்கரவர்த்தி ஹிரோஹிற்றோவின் கடமைகளை, முடிக்குரிய இளவரசர் அகிட்டோ ஏற்றுக்கொண்டார்.

87 வயதான சக்கரவர்த்தி மரணப்படுக்கையில் இருப்பதைத் தொடர்ந்தே இந்த அதிகார மாற்றம் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

வெளி உலகில்

## மக்களைச் சுட்டுக் கொல்ல வேண்டாம்; வெளிநாட்டுத் தூதர்கள் வேண்டுகோள்
### பர்மாவின் இன்றைய நிலை

ரங்கூன், செப் 22
மக்களைக் கண்டபடி சுட்டுக் கொல்வதை நிறுத்தும்படி ரங்கூனில் உள்ள ஆறு வெளிநாடுகளின் தூதர்கள் பர்மா இராணுவ அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றனர்.

ஆறு ராஜதந்திரிகளும் கையெழுத்திட்டு இவ் வேண்டுகோளைச் சமர்ப்பித்தனர்.

இதனிடையில், இராணுவ அரசுத் தலைவர் அரசியல் கட்சிகளுக்கு ஓர் உறுதி மொழியை வழங்கியிருக்கின்றார்.

"என்றும் பதவியில் இருக்கும் எண்ணம் இராணுவத்துக்கு கிடையாது"— என்பதே அந்த உறுதிமொழி.

அதேவேளை பதவி விலகிய ஜனாதிபதி ஜெனரல் நீவின்னால் 26 ஆண்டுகளுக்கு முன் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டி ஆலோசனை நடத்தப் போவதாக முன்னாள் பிரதமர் ஊநூ தெரிவித்திருக்கிறார். (எ)

## ஒரு காலத்தில் ஒதுக்கியவர்கள் பின்னர்-
# கடையிற் சுவாமி திருவடிபட்ட
# மண்ணைத் திருநீறாகப்பூசினர்

கடையிற் சுவாமிகளின் குரு பூஜை நாளையதினமாகும். அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

கடையிற் சுவாமிகள் என்று பக்தர்கள் நித்தம் போற்ற, பென்னம் பெரிய திருக்கோலம் ஒன்று சீயன் முத்தாய்த் திருக்கைலாச மலையிலிருந்து எழுந்தருளி வந்தாற் போல் வந்து வாய்த்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி எமக்கு நியதித்தத்துவமும், காலதத்துவமும் சாதகமாக அமைந்தன. முன்னரே சிவபூமி என்று திருமூல நாயனார் போற்றிய புண்ணிய பூமி எங்கள் புனித பூமி. ஈஸ்வரங்களாற் பொலிந்த எங்கள் நாட்டை மாசுபடுத்திய புறச் சமய இருள் போயகலும் காலம் அது. சிவாலயங்களைச் சிதைத்து விகாரைகள் கட்டியவர்களும், கோட்டைகள் கட்டியவர்களும், போயகன்ற காலம் அது.

புதுப் புனல் பாய்ந்து வந்தாலொப்பப் பாய்ந்து வந்த ஞான வெள்ளத்தைப் பக்குவான்மாக்களே பருகினர். பலர் அது விசர்க்கோலம், சுத்த பைத்தியம், அழுக்காடை, வெற்றிலை வாய், புகை மணம், எண்ணெய் தண்ணீர் காணாத உடம்பு என்றெல்லாம் கருதி ஒதுங்கினர்.

வெற்றிலைத் துப்பல் பட்டும், புகைத் திரள் பட்டும் அவரின் மூச்சுப் பட்டும், ஏச்சுக் கேட்டும் பெரியவர்களான பலரின் மாற்றத்தைக் கண்ட சிலர், அது தவக்கோலம், சிவக்கோலம், குருவடிவு என்று கூறி அவர் சென்ற வழியில் திருவடிபட்ட மண்ணைத் திருநீறெனப் பூசி உவப்பிலா ஆனந்தங் கண்டனர். ஆன்மாக்களைச் சஞ்சிதவினை நீக்கி ஆட்கொள்ள எழுந்தருளிய அற்புதக் கோலம் எனக் கண்டனர்.

அவர் தொட்டது பொன்னாயிற்று. சொன்னது வேதவாக்காயிற்று. நோய்கள் பறந்தன. மலடிகள் மலட்டுத் தன்மை நீங்கினர், முடவர் குலாவி நடந்தனர். ஏழைகள் செல்வராயினர். மூடர்கள் பெருஞானிகளாயினர்.

காந்தம் ஏறிய இரும்பும் காந்தமயமானார் போல இன்புறுவேதி இரும்பைப் பொன்னாக்கினாற் போல, எம்மவர் மலங்கள் வினைகள் நீங்க நல்லவரானார்கள்.

வந்தவர் யார், எங்கிருந்து வந்தார் ஏன் வந்தார், என்னவாய் இருந்தார் என்பன பற்றி எவரும் ஆராயவில்லை. கூடும் அன்பினில் கும்பிட்டனர். அவர் ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கியவர். ஆடை அழுக்கேறிய கந்தை. அதிலும் ஆயிரம் பொத்தல். துன்னம் பெய் கோவணங் கொண்ட சிவன் வழி வந்தவருக்குப் பீதாம்பரம் தேவையில்லை. அவர் பெரிய கடை முடக்குகளில் குப்பை கூளங்களிடையே முடங்கிக் கிடந்தார்.

பெரியவர்கள், அறிவாளிகள், செல்வர்கள், வர்த்தகர்கள் அவரை நினைப்பற நினைத்து இமையாமல் நோக்கி, அவருக்குக் குற்றேவல் செய்யக்காத்திருந்தனர். அவர் எவர் தயவையும் எதிர் பாராது எழுந்து எட்டியடி வைத்துக் கால் போன போக்கில் போவார். அவர் சென்ற வழியில் [illegible] ஏசாரோ, ஒரு வார்த்தை சொல்லாரோ, அன்றித் தமக்குப் படுமாறு வெற்றிலைத் துப்பலை உமிழாரோ, அவரின் சுருட்டுப் புகை தம்மீது படாதோ என்று எல்லோரும் கூட்டுக்காலில் கைகட்டி நிற்பர். அஞ்சிப் பணிந்து நிற்பவர்தம் நெஞ்சில் அவர் நிறைந்து அப்பால் போவார்.

அவர் எட்டி நடந்த போதே கண்டோர் கலி நீங்கும் என்பர். 'பெரிய கடைநாதன் பித்தன் திருக்கோலம், கரியவர்ணச்சீலை, கருந்தோலென சால்வை, துரியாதீதப் பொட்டு' கண்டீரோ என்று கண்டவர்கள் காணாதவர்களைக் கேட்டுக் கேட்டுப் புளகாங்கிதம் அடைந்தார்கள். ஆனையைக் காணாதவர்களும் ஆனையடியைக் கண்ட வீரனைக் கண்டோம் என்று வீரம் பேசிய பான்மையில் திருக்கோலம் காணாதவர்கள் பலர், கண்டவர்களைக் கண்டு பெருமைப்பட்டதும் உண்டு.

எங்கள் சமயத்தில் ஆலயந் தொழுவது சாலவும் நன்று என்றாற் போல, மாலற நேயம் மலிந்தவர் வேடம் காண்பதும் சாலவும் நன்று. தவவேடத்தையும் ஆலயத்தையும் வணங்குமாறு மெய்கண்டார் தமது சிவஞான போதத்தில் இறுதிச் சுலோகத்தில் பாடியிருக்கிறார். எனவே பக்தரது திருவேடமும் சிவாலயமும் எமக்குப் பரமேஸ்வரன் வடிவு.

யாழ்ப்பாணத்துக்குப் பெருவாழ்வு தந்தகடையிற்சுவாமிகளின் தீட்சாநாமம் முத்தியானந்தர் என்றும், அவருடன் நிரஞ்சனானந்தர், சின்மயானந்தர் என்பார் இருவரும் [illegible] டிருந்தார்கள் என்றும், மூவருவும் ஒருருவென முத்தி சாதனம் வழங்கிவந்ததென்றும், சித்தமல மறுபட்டுச் சிவமானோர் திருக்கூட்டம் ஒன்று ஈழத்துச் சித்தர் பரம்பரையை மெத்தப் பிரகாசிக்கச் செய்தது என்றும் கூறுவர்.

பரமபக்தராகிய கடையிற் சுவாமிகளின் சமாதித் திருக்கோயில் அவரை நேரிற் காணும் பேறு கொடுப்பதோடு, பேரருள் சுரந்து ஒளி வீசுவது. ஒடுக்கத்தில் இருந்து தியானம் செய்பவர்களின் மனக்கண்ணில் கடையிற் குருநாதன் காட்சியளிப்பர். அன்று 1891 ஆம் ஆண்டில் புரட்டாதி மாதத்துச் சதயநாள் அவர் மகாசமாதியடைந்த நாள்.

ஈழமெங்கும் சிவலிங்கங்களும் சிவாலயங்களும் நிறைந்திருக்கும் பான்மையில் சித்தர்கள் பலரின் சமாதிக்கோயில்களும், நினைவு மடங்களும் நிறையவுள்ளன. கடையிற்சுவாமிகள், நிரஞ்சனானந்த சுவாமிகள்-பரமகுரு சுவாமிகள், சின்மயானந்த சுவாமிகள், அருளம்பல சுவாமிகள், குழந்தைவேற்சுவாமிகள், சடைவரதசுவாமிகள், ஆனைக்குட்டிச் சுவாமிகள், சாஜன் சுவாமிகள், நவநாதசித்தர், கனகரத்தினசுவாமிகள், மகாதேவாசுவாமிகள், செல்லாச்சி அம்மா, சடையம்மா, கோண்டாவில் அம்மா, குடைச்சாமிகள், செல்லப்பா சுவாமிகள், சிவயோக சுவாமிகள் முதலானோரின் ஞானச்சுவடுகள் நம்மை வாழ்விக்கின்றன. நாங்கள் அவர்களை அறியாதிருந்த போதிலும் அவர்கள் எங்களை அறிந்து அருள் புரிந்து ஆளாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை காலமும் அவர்களை அறியாதவர்கள், இனிமேலாவது ஓடோடிச் சென்று அவர்கள் பீடங்களை வணங்கி உய்தி பெறுவோமாக.

ஒரு பொல்லாப்பும் இல்லை.

க. சி. குலரத்தினம்

★ ★ ★

# 'கம்பியூட்டர் வைரஸ்' என்றால் என்ன?

டோக்கியோ, செப்டெம்பர் 22
கம்பியூட்டரில் 'வைரஸ்' புகுந்து சேகரித்து வைத்துள்ள தகவல்களை அழித்து விடுகின்றன என்று இப்போது கூறப்படுகிறது.

'கம்பியூட்டரில் வைரஸ்' என்றால் என்ன?

கம்பியூட்டரில் வேலை செய்யும் ஊழியர்களின் சங்கேத இசைவு வார்த்தைகளை சில குறும்பர்கள் திருட்டுத்தனமாக அறிந்து வைத்துக் கொண்டு 'கம்பியூட்டர் வைரஸ்' என்று சொல்லப்படுகின்ற குறும்புத் தனத்தைப் புரிந்து விடுகிறார்கள்

எனவேதான் உயிரியல் வைரஸ்சை ஒத்த வகையில் இதனை கம்பியூட்டர் வைரஸ் என்று அழைக்கிறார்கள்.

குறும்பர்களின் இந்த உத்தி கம்பியூட்டர்களில் உள்ள தரவுகளையும் மாற்றி அமைத்து விடுகின்றன.

இந்த 'வைரஸ்' தொல்லையைச் சமாளிக்க ஜப்பானிய நிபுணர்கள் 'வைரஸ் தடுப்பு மருந்து' ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.

ஜப்பானிய மிகப் பெரிய பிரத்தியேக கம்பியூட்டர் தொகுதி ஒன்றை கம்பியூட்டர் 'வைரஸ்'கள் படையெடுத்துள்ளன.

நெக் கோப்பரேஷனின் 'பிஸி-வான்' கம்பியூட்டர் தொகுதியே இத்தாக்கத்துக்காளானது.

ஜப்பானிய கம்பியூட்டர் தொகுதி ஒன்று கம்பியூட்டர் வைரஸினால் சீர்குலைந்தது இதுவே முதல் தடவை.

அமெரிக்காவில் கம்பியூட்டர் தொகுதி ஒன்றில் 'வைரஸ்சை' புகுத்தி அதில் சேகரித்து வைக்கப்பட்ட 1 லட்சத்து 60 ஆயிரம் தகவல்களை அழித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் கம்பியூட்டர் அதிகாரி ஒருவரை அமெரிக்க நீதிமன்றம் ஒன்று குற்றவாளியாகக் கண்டிருப்பது தெரிந்ததே.

இது சம்பந்தமான செய்தி, நேற்றைய உதயனில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. (எ)

புதிய--பழைய பாடத்தின் கீழ்:
# ஜீ. சி. ஈ. பரீட்சைகள் டிச.2, டிச.3 இல் ஆரம்பம்

புதிய பாடத்தின் கீழ் 1988 டிசம்பருக்கான ஜீ. சி. ஈ சாதாரணதரப் பரீட்சை டிசம்பர் இரண்டாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அத்துடன் இவ்வருடத்தில் இருந்து முற்றாக முடிவுறும் பழையபாடத் திட்டத்தின்படி நடைபெறவுள்ள ஜீ. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சை டிசம்பர் மாதம் மூன்றாம் திகதி ஆரம்பமாகும்.

இவ்வருடம் இரண்டு ஜீ. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சைகள் நடைபெற உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-119)

## கடத்தப்பட்ட சட்டத்தரணி பிணமாகக் கண்டுபிடிப்பு

வடமராட்சி, செப். 23
காணாமற்போன சட்டத்தரணி பிணமாகக் கண்டுபிடிக்கப்பட்டார்.

கடந்த 15 ஆம் திகதி வல்வெட்டியில் திருமண வைபவம் ஒன்றுக்குச் சென்றுவிட்டு வரும் வழியில் சட்டத்தரணியான கு. சுந்தரலிங்கம் கடத்தப் பட்டிருந்தார். (இச்செய்தி 19 ஆம் திகதி உதயனில் வெளியானது குறிப்பிடத்தக்கது)

மேற்படி சட்டத்தரணியின் சடலம் வல்வை மதவடிக் கடற்கரைக்குச் சமீபமாக காயங்களுடன் அடையாளம் காணமுடியாத நிலையில் கிடந்ததால் அதனை வல்வைப் பொதுமக்கள் ஊறணி மயானத்திற்குச் சமீபமாக அடக்கம் செய்திருந்தனர்.

தகவல் அறிந்த சட்டத்தரணியின் குடும்பத்தினர் புதைக்கப்பட்ட இடத்தினைத் தோண்டி அடையாளம் கண்டு அவரதுசொந்த ஊருக்கு எடுத்துச் சென்று அங்கு அடக்கம் செய்தனர். (ஓ-160)

### மீன் பிடிக்கச் சென்ற இருவர் திரும்பவில்லை

காங்கேசன்துறை செப்23
தாளையடியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்கள் இன்னும் திரும்பவில்லை என்று அமைதிப்படைக்கு புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தாளையடியைச் சேர்ந்த கே. நவநீதராசா என்பவரின் பிளாஸ்டிக் மீன் பிடிப்படகில் கடந்த 14 ஆம் திகதி செல்லையா யோகேஸ்வரன் (16-வயது), சபாபதிப்பிள்ளை விஜயகுமார் (20 வயது) ஆகிய இருவரும் தாளையடி வத்திராயனில் இருந்து மீன் பிடிக்கச் சென்றனர்.

வலைகள், உபகரணங்கள் ஆகியவற்றுடன் சென்ற இவர்கள் இதுவரை வீடுதிரும்பவில்லை.

இது குறித்து தாளையடி காங்கேசன்துறை அமைதிப்படை முகாம் அதிகாரிகளுக்கு புகார் செய்யப்பட்டுள்ளது. (ச-68)

சமய நிகழ்ச்சிகளில்

### கடையிற் சுவாமிகளின் 98வது குருபூசை

யாழ்ப்பாணம், செப். 23
கடையிற் சுவாமிகளின் 98 ஆவது குருபூசைத் தினமும் அன்னதானமும் நாளை சனிக்கிழமை நடைபெறும்.

அன்று காலை 10-00 மணிக்கு உருத்திர கும்பாபிஷேகமும், 11-15க்கு கடையிற் சுவாமிகளின் திருவுருவத்திற்கு விசேட பூசையும், குழந்தைவேல் சுவாமிகளால் பாடப்பட்ட 41 துதிப் பாடல்களும் ஓதப்படும்.

பன்னிரண்டு மணிக்கு அன்னதானம் வழங்கப்படும். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய்பாவா ஸ்ரிக்கர்
அண்ணு மோல்ட் டொபி லேபல்க ளில் 50 வெற்று லேபல்களை கொடுத்து 1 சாய்பாவா ஸ்ரிக்கர் அல்லது ஒரு கொப்பியை இனமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.
பெற்றுக்கொள்ள வேண்டிய இடம்:
**அண்ணு தொழிலகம்,**
இணுவில்.

# உதயன்

23 - 09 - 1988 வெள்ளிக்கிழமை

மல்லி கலந்த கோப்பி
யாழ்ப்பாணம் முறைப்படி தயாரிக் கப்பட்ட மல்லிக் கோப்பி இப்போது 100g பக்கட்டுக்களில்வெளிவருகிறது. 1 பக்கட்விலை 10/- ரூபா வியாபாரிக ளுக்கு விசேடகழிவு கொடுக்கப்படும்.
**அண்ணு கோப்பிக் கடை,**
யாழ்ப்பாணம்.

## ஜனாதிபதியின் சேவைக்குப் பாராட்டு

கொழும்பு, செப்.23 ஜனாதிபதி ஜெயவர்த்தன நாட்டு மக்களுக்குச் செய்த சேவைகளை அரச நாடாளுமன்றக் குழு பாராட்டி தீர்மானத்தை நேற்று நிறைவேற்றியது. (ஒ-எ)

## நாளைய சஞ்சீவியில்

★ இந்து மத அடிப்படையில் எழுந்த சீன அக்குபங்சர் வைத்திய முறை
★ சுப்பர் கம்பியூட்டரின் அசுர சாதனைகள்
★ கே. சுமதியின் 'வித்தியாசமானவள்' (சிறுகதை)
★ குழந்தை அழுவதை நிறுத்துவது எப்படி ?
★ அபிவிருத்தி என்றால் என்ன ? [பாடம் பயில்வோம்; ஜி. சி, ஈ. சாதாரணம் — சமூகக் கல்வி)
★ தமிழ் சினிமாவில் இன்றைய நகைச் சுவை பற்றி டணல் தங்கவேலு
★ எம். ஜி ஆர். திறந்த புத்தகம் ஜானகி பேட்டி
★ ஏழு கட்சிக் கூட்டணி — இந்திரா காங்கிரஸுக்கு சவாலா ? —உலக உலா
★ மற்றும் வழமையான அம்சங்களுடன்

COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING - BASIC LANGUAGE
**6 Month Course**
சனி, ஞாயிறு வகுப்புகள்
ஆரம்பம் 24-09-88 சனி காலை 10.00 மணி
**கட்டணம் ரூபா 1500/-**
(மூன்று தவணைகளில் செலுத்தலாம்)
வார நாள் வியாழன், வெள்ளி - வகுப்புக்களும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. இவ்வகுப்புகளிலும் சேரலாம்.
**HARVARD INSTITUTE**
Successors of
**CANTABIA INSTITUTE**
(Sister Organization of Oxonia, Colombo And Pioneers in Computer Education)
No. 21, MAIN STREET, JAFFNA
(2ஆம் குறுக்குத்தெரு வழியாக வரவேண்டும்)
C-271

**விக்னு டியூசன் சென்ரர்**
52, ஸ்ரான்லி ரேட், யாழ்.
(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)
**O/L வினு-விடை**
**[பிரிவு —7]**
ஆரம்பம் : 28-9-1988
DAY CLASSES - 8-30 - 1-30
EVENING CLASSES - 2-45 - 4-45
முக்கிய குறிப்பு :
I. எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினல் போதிக்கப்படுகின்றது.
II. பயிற்சிப் பரீட்சைகள் இலவசமாக நடாத்தப்படும்.
III. குறிப்பிட்ட மாணவர்களுக்கே அனுமதி வழங்கப்படும்.
IV. பாடக் குறிப்புக்கள் இலவசமாக வழங்கப்படும்.
(C/266)

# தென்மராட்சி எங்கும் உண்ணுவிரதம்;
## சாவகச்சேரியில் அஞ்சலிக் கூட்டமும் நடந்தது

யாழ்ப்பாணம் செப் 23 தியாகச் செம்மல் திலீபன் உயிர் நீத்த ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு நேற்று தென்மராட்சிப் பகுதியின் பல இடங்களிலும் உண்ணுவிரதம் நடைபெற்றது.

சாவகச்சேரியில், அங்குள்ள வாரிவனநாதர் சிவன்கோவில் முன்றலில் உண்ணுவிரதம் நடைபெற்றது.

சாவகச்சேரியின் சகல பாடசாலை மாணவர்களும் பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும் இதில் கலந்து கொண்டனர்.

தென்மராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாடு செய்திருந்த இந் நிகழ்ச்சியில் அன்னையர் முன்னணியினர், பிரசைகள் குழுவினர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

உண்ணுவிரத முடிவில் நடைபெற்ற அஞ்சலிப் பொதுக் கூட்டத்தில் மாணவர் ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர்களும், பிரசைகள் குழு உறுப்பினர்களும் உரையாற்றினர்.

### மீசாலையில்

இதேவேளை மீசாலை சந்தியிலும் நேற்று உண்ணுவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

பெருந்திரளான மக்கள் இந்த உண்ணுவிரதத்தில் கலந்து கொண்டனர்.

தென்மராட்சிப் பகுதி எங்கும் திலீபனின் அஞ்சலிச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பதுடன், புலிக்கொடிகளும் பறக்க விடப்பட்டுள்ளன.

## ஒரே பார்வையில் ஒலிம்பிக்

(22 - 9 - 1988 [வியாழன்] வரை)

சோல், செப். 23

சோல் ஒலிம்பிக் போட்டியில் வியாழன்வரை பதக்கங்கள் பெற்ற நாடுகள் பற்றிய விவரம் வருமாறு;

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சோவியத்யூனியன்- | 13 | 4 | 11 |
| கி. ஜேர்மனி- | 6 | 7 | 6 |
| அமெரிக்கா- | 5 | 4 | 4 |
| பல்கேரியா- | 3 | 2 | 2 |
| ஹங்கேரி- | 3 | 0 | 0 |
| இத்தாலி- | 2 | 0 | 0 |
| யூகோஸ்லேவியா- | 2 | 0 | 0 |
| சீனு- | 1 | 2 | 3 |
| ருமேனியா- | 1 | 1 | 0 |
| ஆஸ்திரேலியா- | 1 | 1 | 0 |
| பிரிட்டன்- | 1 | 0 | 0 |
| செக்கோஸ்லேவேகியா- | 1 | 0 | 0 |
| தென் கொரியா- | 1 | 2 | 0 |
| சுரினும்- | 1 | 0 | 0 |
| நோர்வே- | 1 | 0 | 0 |
| போலந்து- | 1 | 0 | 0 |
| மே. ஜேர்மனி- | 1 | 0 | 0 |
| நியூசிலாந்து- | 1 | 0 | 0 |

(ஒ-எ)

### அரைக்கம்பத்தில் புலிக் கொடிகள்

சாவகச்சேரி, பளை, உசன், கெருடாவில், பட்டுவில், வரணி ஆகிய இடங்களில் அரைக் கம்பங்களில் புலிக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.

கடைகள், வாகனங்கள் அனைத்திலும் கறுப்புக் கொடிகள் பறக்கின்றன.

பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் கறுப்புப்பட்டி அணிந்திருந்ததையும் காண முடிந்தது.

### முஸ்லிம்கள் பிரார்த்தனை

சாவகச்சேரி முஸ்லிம் பள்ளிவாசலில் திலீபன் நினைவாக விசேட பிரார்த்தனையும் நடைபெற்றது.

தென்மராட்சி எங்கும் சோக கீதங்கள் ஒலித்த வண்ணம் இருக்கிறது.

26 ஆம் திகதி வரை உண்ணுவிரதம் தொடர்ந்து நடைபெறும் எனத் தென்மராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக் குழு அறிவித்துள்ளது. (ஓ-10)

## இன்றைய உண்ணுவிரதம்

அஹிம்சையின் தலைவன் திலீபனின் ஓராண்டு நினைவை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை வடமராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக் குழுவினுல் பருத்தித்துறையில் மாபெரும் ஒருநாள் அடையாள உண்ணுவிரதம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

உண்ணுவிரதம் பருத்தித்துறை மருதடி முருகையன் கோவில் முன்பாகவும், நெல்லியடியிலும் காலை 7 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணிக்கு முடிவடையும்.

### பாஷையூரில்

பாஷையூர் மக்கள் ஒன்றிணைந்து இன்று காலை பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய முன்றலில் திலீபனின் ஓராண்டு நினைவாக உண்ணுவிரதம் அனுஷ்டிக்க உள்ளனர். (ஓ

## 31 பேருடன் வந்தது கப்பல்

பூஸாவிலிருந்து விடுவிக்கப்பட்ட அரசியல் கைதிகள் 31 பேரை ஏற்றிக்கொண்டு இந்தியக் கடற்படைக் கப்பல் ஒன்று நேற்றுக்காலை காங்கேசன் துறையை வந்தடைந்தது.

இந்தக்கப்பல் கடந்த 20 ஆம் திகதி விடுவிக்கப்பட்ட 217 பேருடன் அன்றைய தினம் காலை 10.30க்கு காலி துறைமுகத்திலிருந்து புறப்பட்டு கடந்த புதன்கிழமை (21 ஆம் திகதி) 10.45க்கு திருகோணமலையைச் சென்றடைந்தது.

அங்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 186 கைதிகளை இறக்கிவிட்டு பின்னர், பிற்பகல் 4 மணிக்கு அங்கிருந்து புறப்பட்ட கப்பல் நேற்றுக் காலை 6.40க்கு காங்கேசன்துறையை வந்தடைந்தது. (ஒ-9)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
**மருத்துவ பீடம்**
**விரிவுரைகளின் ஆரம்பம்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட 1986 ஆம், 1987 ஆம் ஆண்டுகளுக்கான மாணவர்களுக்கு விரிவுரைகள் அக்டோபர் மாதம் மூன்றும் திகதி ஆரம்பமாகும்.
பதில் பதிவாளர்.
(C262)

## தண்டிக்கப்பட்ட..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருனபோதிலும் விவரிக்க முடியாத சித்திரவதை உத்திகளை எம்மில் பரிசோதனைசெய்து பெறப்பட்ட ஒப்புதல் எழுத்து வாக்கு மூலத்தைக் கொண்டுஎமக்கெதிரான குற்றச்சாட்டை நிரூபித்தனர் ஸ்ரீலங்காப் படையினர்.

இந்நிலையில் தொடர்ந்து வழக்காடும் நிதி வசதி எம்மிடம் இருக்கவில்லை. இதன்காரணமாக குற்றத்தை ஒப்புக் கொண்டு தண்டனையைக் குறைக்குமாறு மன்ருடும் நடைமுறையைத் தவிர வேறு வழியில்லாத நிலையில் நாம் தண்டனைபெற்றோம்.

### அவர்கள் வெளியே நாம் ... ... ?

இதில் வேடிக்கை என்னவென்ருல் நாம் யாரைப்பற்றித் தகவல் கொடுக்கவில்லைஎன்றும், யாருக்கு உணவு, புகலிட உதவி செய்தோம் என்றும் குற்றஞ்சாட்டிக் கைது செய்யப்பட்டோமோ அவர்களே விடுதலை செய்யப்பட்டு சுதந்திரமாக நடமாடும் போது நாம்மட்டும்சிறையில் வாடி நிற்கிறோம்.

எனவே உடனடியாக இது விடயத்தில் தலையிட்டு 30ஆம் திகதிக்கு முன் எமது விடுதலைக்கு வழி செய்வீர்களென நம்பியிருக்கிறோம்.

இந்தத் தவணை தவறும் பட்சத்தில் திட்டமிட்டுள்ளவாறு சாகும் வரை உண்ணுவிரதம் மேற்கொள்ள உள்ளோம்.

இந்தமரணயாத்திரையில் இந்த தற்காலிக சிறையிலுள்ள அனைத்து தண்டிக்கப்பட்ட அரசியல் கைதிகளும் சட்டம் கட்டமாக ஈடுபட உள்ளனர். இதில் முதல் கட்டமாகபின்வருவோர் சாகும்வரை உண்ணுவிரதம் மேற்கொள்ள உள்ளனர்.

சின்னத்துரை சிவலிங்கம் (வயது 40) திருகோணமலை, அந்தோனிப்பிள்ளை ஜெயானந்தன் (வயது24) மன்னுர், பாலசிங்கம் பாலராஜன் (வயது 24) யாழ்ப்பாணம், பெருமாள் கிருஷ்ணமூர்த்தி (வயது 37) நுவரெலியா, சரவணபவன் முருகானந்தம் (வயது 21) திருகோணமலை.

இந்த ஒப்பந்தம் எமக்கு விடுதலையைப் பெற்றுத் தராவிட்டால்எமது மரணம் எமக்கு விமோசனத்தைப் பெற்றுத் தரட்டும்.

இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

## வடக்கிலோ.,.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கெஸ்பவா எம். பி. காமினி லொக்குகே:

இன்றைய நிலைக்கு சகல அரசியல் கட்சிகளுமே பொறுப்பேற்க வேண்டும்.

இரத்தினபுரி எம். பி. நந்தா எல்லவெல:

தடுப்புக் காவலில் உள்ள நிரபராதிகள் அனைவரும் விடுவிக்கப்படவேண்டும்.

பிரதி அமைச்சர் பிரேமச்சந்திரா:

மக்கள் எதிர்பார்த்த காலம் உதயமாகிவிட்டது. (ஒ-எ)

## சுன்னுகத்தில்.,.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கவுள்ளனர்.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் சுன்னுகம் வர்த்தகர் சங்கம் மேற்கொண்டுள்ளது.

இன்று காலை எட்டு மணிக்கு சுன்னுகம் சந்தைக்கு முன்பாக அமைந்துள்ள விசேட பந்தலில் உண்ணுவிரதம் ஆரம்பமாகும்.

இதேவேளை 26 ஆம் திகதியும் சுன்னுகத்தில் கடையடைப்பும், ஆலயங்களில் விசேட பூசைகளும் இடம் பெறும். (ஒ-10)

# மில்க்வைற் தொழிலகத்தில் ரூபா 3 லட்சம் கொள்ளை!

யாழ்ப்பாணம், செப் 23 ''மில்க்வைற்'' தொழிற் சாலையில் மூன்று லட்சம் ரூபா கொள்ளையடிக்கப் பட்டுள்ளதாக யாழ். பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த ஏழாம் திகதி சாலை 5 மணி அளவில் இனம்தெரியாத கோஷ்டியினர் மில்க்வைற் தொழிற்சாலைக்குள் புகுந்து அங்கிருந்த காவலாளிகளையும் ஊழியர்களையும் மிரட்டிவிட்டு பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

மில்க்வைற் தொழிற்சாலை அலுவலகத்தில் இரும்புப் பெட்டியுள் இருந்த பணம் இவ்வாறு கொள்ளை யடிக்கப்பட்டதாக பொலீஸில் புகாரிடப்பட்டுள்ளது. (ஒ-18)

## ஐ. சோ. மு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குமாரணதுங்கா ஐ.சோ. மு. சார்பில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட இருந்தார்.

இவர் பாதுகாப்புக் காரணங்களுக்காக இங்கிலாந்து சென்று இதுவரை நாடு திரும்பவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எண்ணம் தமக்கு இல்லை என்று அறிவித்திருந்தார்.எனினும் அவர் முன்னணிக்கு உத்தியோக பூர்வ பதில் எதையும் இதுவரை அனுப்பாததால் திரு. ஒஸி அபயசேகரா தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (ஒ-3)

## திங்களன்று..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுக்சப்பட்டுள்ளது.

அத்துடன் அன்றைய தினம் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறும் தியாகி திலீபனின் சிலைகள் திறத்தல், அன்னதானம் வழங்குதல் போன்றவற்றை முடித்துவிட்டுக் காலை பத்து மணிக்கு நல்லூரில் சகலரையும் கூடுமாறும் பிரசைகள் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

திலீபனின் அஞ்சலிக் கூட்டத்தில் சகல தமிழ் மக்களையும் கலந்து கொள்ளுமாறும் வேண்டப்பட்டுள்ளது. (ஒ-10)

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 23 அண்மையில் முதலாம் தர அதிபர்களாகப் பதவிஉயர்வுபெற்ற அதிபர்களுக்கான கூட்டம் நாளை சனிக்கிழமைகாலை 9-30 மணியளவில் யாழ் இந்துக்கல்லூரியில்நடைபெறவுள்ளது. (ஒ-5)

## அவதூறு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களுடன் மனந்திறந்து விவாதிக்கத் தான் தயாராக இருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார். (ஒ-எ)

## துப்பாக்கி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யினர் இளைஞரை நோக்கிச் சுட்டனர் என்றும்அதனுல் அப்பகுதியில் பொதுமக்கள் மத்தியில் பதற்றம் நிலவியதாகவும் தகவல்கள் கிடைத்தன.

சம்பந்தப்பட்ட இளைஞர் பொதுமக்களிடம் இருந்து பணம் சேகரிப்பதில் ஈடுபட்டதாக அவர்களிடம் இருந்து கிடைத்த புகார்களைத் தொடர்ந்தே அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அப்போதே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் இந்திய அமைதிப் படையின் தலைமையகம் இது குறித்துத் தெரியப்படுத்தியது. (அ-9)

# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம்- பொன்னம்பலம்

சுழிபுரம் மேற்கைச்சேர்ந்த ஞானியார் என அழைக்கப்படும் பொன்னம்பலம் காலமாகி விட்டார். இவர் காலம் சென்ற செல்லத்தின் கணவரும் காலம் சென்ற இலட்சுமியார், பூமாதேவி (மலேசியா), பரமலிங்கம் (கனடா), கார்த்திகேசு (மருத்துவ ஆய்வு கூடப் பரிசோதகர் கொழும்பு.) வைத்திலிங்கம் (லண்டன்), நாகம்மா (சுழிபுரம்) ஆகியோரின் தந்தையும், மகிழ்தேவி (கனடா.) விஜயசுந்தரி, செல்வராணி (லண்டன்), துரைசிங்கம் ஆகியோரின் மாமனும் திருமதி உமாபதி ஞானேஸ்வரி, சிவசண்முகமூர்த்தி(லண்டன்)ஆறுமுகம், சிவநாதன், சிவலிங்கம் (மலேசியா) நிரஞ்சன்-நித்தியா அருணு- நிர்மலா (கனடா), ரவீந்திரன், திருமதி குலேந்திரன்- மைதிலி, ராகுலன்-தயாளினி- காயத்திரி (லண்டன்), மிருணுளினி (ரஷ்யா) ஆகியோரின் பேரனும், நிதர்சனி, சயந்தன், கிருஷாந்த் (லண்டன்) ஆகியோரின் பாட்டனுரும் ஆவார்.

அன்னுரின் ஈமக்கிரியைகள் 22-9-88 வியாழக்கிழமை திருவடிநிலை மயானத்தில் நடைபெற்றது.

தகவல்:
**வி. உமாபதி**

(6589)

## சின்னத்துரை விஜயகுமார்

(ஆனந்து)

சின்னத்துரை விஜயகுமார் 12-09-88 இல் சுவிற்சிலாந்தில் அகாலமரணமானுர். அன்னுர் சின்னத்துரை, காலம் சென்ற மங்கையற்கரசி ஆகியோரின் அன்பு மகனும், சரவணபவானந்தன் (பிரபா ஸ்ரோர்ஸ், நல்லூர் மார்க்கெட், கல்வியங்காடு), பாலபரமேஸ்வரி, அருளானந்தம் (சுவிஸ்), புவனேஸ்வரி, சிவகுமார், வாமதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மனோகரராஜா (நொதேர்ன் இண்டஸ்றீஸ்), மனோகரி, திருமகள் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னரது ஈமக்கிரியைகள் 23-09-88 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காலை 10 மணிக்கு செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **வே. சின்னத்துரை.**
96, சட்டநாதர் வீதி,
நல்லூர். (6736)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] [illegible] நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 23-09-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Friday 23nd Sptember 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org